வியாழக்கிழமை 24 நவம்பர் 2022
தமிழருவி வார இதழ் |Tamilaruvi Weekly

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 44

தமிழின் தலைநிமிர்வு

INTERNATIONAL DAY FOR THE ELIMINATION OF VIOLENCE AGAINST WOMEN NOVEMBER 25

பெண்களுக்கெதிரான அனைத்து வன்முறைகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர் 25



## கலைகள் கடந்து போகும் நாடுகளின் வரை படங்கள்...

## ஆக்கத்திறனை ஆதிக்கம் செய்யும் தொழில் நுட்பம்!

## வந்தார்கள் வென்றார்கள் சென்றார்கள்...

## இலவுகாத்த கிளியாகும் தமிழ் அரசியல் தலைமைகள்

# அரசாங்கத்தை மாற்ற முனைந்தால் இராணுவத்தை பயன்படுத்துவேன்

## ஜனாதிபதி ரணில் கடும் எச்சரிக்கை

அரசாங்கத்தை மாற்றுவதற்காக எவரும் முயற்சித்தால், அதற்கு இடமளிக்கப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இராணுவத்தை பயன்படுத்தி அல்லது அவசரகாலசட்டத்தை நடைமுறைப்படுத்தியாவது அதற்கு இடம் தரப்படமாட்டாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை உரையாற்றியபோதே ரணில் விக்கிரமசிங்க இந்த கருத்துக்களை வெளியிட்டார்.



இதே வேளை இலங்கையின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும் வரை நாடாளுமன்றத்தை கலைக்கப்போவதில்லை என்று ரணில் தெரிவித்தார். பொருளாதாரத்தை சீராக்கிய பின்னர் தேர்தலுக்கு செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவருக்கும் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்த முடியும். வீதியை நெருக்கடியை ஏற்படுத்தாமல், ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியும். எனினும் அதற்காக காவல் துறையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் ரணில் தெரிவித்தார்.

## பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட தேரர் மீண்டும் விளக்கமறியலுக்கு!

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று புதன்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட கல்வெவ சிறிதம்ம தேரர் கடுவெல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.



கடந்த ஜூன் 10 ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் காவல் துறையினரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய கல்வெவ சிறிதம்ம தேரர் கடுவெல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அதன்படி, கல்வெவ சிறிதம்ம தேரர் எதிர்வரும் டிசம்பர் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த, சிறிதம்ம தேரர் மற்றும் வசந்த முதலிகே ஆகியோர் கடந்த 17 ஆம் திகதி கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், இன்று சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் சிறிதம்ம தேரருக்கு மாத்திரம் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியிருந்தது.

## அதிகார பரவலாக்கம் குறித்து டிசம்பர் 11 இன் பின்னர் அனைத்துக் கட்சிகளின் கலந்துரையாடல்

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்புகள் நிறைவடைந்த பின்னர், அனைத்து கட்சி கூட்டத்தை அழைக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்றில் அவர் இந்த உறுதியை அளித்துள்ளார்.

இதன்படி, டிசம்பர் 11ஆம் திகதிக்கு பின்னர் இது தொடர்பான கூட்டத்தை அழைக்கவுள்ளதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தமது இலக்கின்படி இனப் பிரச்சினைக்கான தீர்வு இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின வருடத்தில் காணப்பட வேண்டும்.

இல்லையேல் தீர்வைக் காணுவதற்கு 2048 ஆம் ஆண்டு வரை செல்லவேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய ரணில் விக்ரமசிங்க, 1984 ஆம் ஆண்டு முதல் இனப்பிரச்சினை தீர்வுக்கான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்காக தமிழ் சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும். அதே போன்று சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் நியாயமான அச்சங்கள் போக்கப்படவேண்டும்.

அத்துடன் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்

இதே வேளை, வடக்கில் காணி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாம் நாடாளுமன்றத்தை கலைக்கப்போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை முடிவடைந்த பின்னர் தேர்தலுக்கு செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பில் வீடு வீடாக சென்று பொலிஸ் பதிவு

## அமைச்சர் டிரான் அலசுடன் மனோ எம்.பி சபையில் வாக்குவாதம்

கொழும்பில் தமிழர்களை குறிவைத்து இன்னமும் ஆங்காங்கே பொலிஸ் பதிவு நடைமுறை மேற்கொள்ளப்படுவது தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனுக்கும், பொதுமக்கள் பாதுகாப்பு பொலிஸ் துறை அமைச்சர் டிரன் அலசுக்கும் இடையில் சபையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

அதன்போது, ..எனது மக்கள் என்னிடம் புகார் செய்கிறார்கள். அவர்கள் என்னிடம்தான் கூறுவார்கள். நான்தான் அவர்களின் பிரதிநிதி. எனது மக்கள் என்னை நாடாளுமன்றம் அனுப்பியது, தேங்காய் திருவ அல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள்.. என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் உரத்த குரலில் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் அலுவலகங்கள், பொலிஸ் ஆணைக்குழு உட்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் பற்றிய வரவு செலவு திட்ட விவாதத்தின் போது மேலும் உரையாற்றிய மனோ கணேசன் எம்.பி,

கொழும்பு நகரில் வீடு வீடாக சென்று, பொலிஸார் தனிப்பட்ட விபரங்களை பதிவு செய்கிறார்கள். இதுபற்றி ஜனாதிபதிக்கு கூறியுள்ளேன். துறைசார் அமைச்சர் உங்களுக்கு கூறியுள்ளேன்.



பொலிஸ் மா அதிபருக்கு கூறியுள்ளேன்.

பொலிஸ் ஆணைக்குழு தலைவருக்கு கூறியுள்ளேன். அவர் இன்று இருக்கிறாரோ தெரியவில்லை அல்லது யாரையாவது வரவேற்க விமான நிலையத்துக்கு சென்று விட்டாரோ தெரியவில்லை.

கீழ்மட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிகளிடம் கேட்டால், மேலிடம் கூறிதான் செய்கிறோம் சார் என்று அவர்கள் எனக்கு கூறுகிறார்கள். யார் அந்த மேலிடம்? யுத்த காலத்தில் ஏதோ ஒரு நியாயம் இருந்தது. இன்று சமாதான காலம். இயல்புநிலை காலம் . இன்று யுத்தம் இல்லை. பயங்கரவாதம் இல்லை. அரச பயங்கரவாதம் இல்லை. ஆகவே எதற்காக வீடு வீடாக போகிறீர்கள்? கதவு கதவாக போகிறீர்கள்?

கிரிமினல்கள் எங்கேயும் உள்ளார்கள். இங்கே இந்த நாடாளுமன்றத்தில் இல்லையா? கொலை குற்றம் சாட்டப்பட்டவர்கள், கொள்ளை குற்றம் சாட்டப்பட்டவர்கள், வழக்கு உள்ளவர்கள் இங்கே இல்லையா? இருக்கிறார்கள். அது போல் பொலிசிலும் உள்ளார்கள். பொலிசுக்கு தரும் தகவல்கள் கிரிமினல்கள், பாதாள உலகத்தினர் கைகளுக்கு போயுள்ளன. கடந்த காலங்களில் இப்படி பல சம்பவங்கள் நடந்துள்ளன. ஆகவே அது வேண்டாம். எனது மாவட்ட மக்களின் தனிப்பட்ட தகவல்களை வீடு வீடாக சென்று சேகரிக்கும் நடவடிக்கைக்கு இடம் தர எனக்கு முடியாது.

குற்றம் செய்தவர்கள் இருப்பார்களானால், அவர்களை விசாரியுங்கள். கைது செய்யுங்கள். அதில் பிரச்சினை இல்லை. நான் சட்டத்தை மதிக்கும் எம்.பி. சட்டத்தின் ஆட்சியை விரும்பும் மனிதன். இங்கே, வீடு வீடாக பொதுவாக போக வேண்டாம் என்பதைதான் நான் கூறுகிறேன். இங்கே குறிப்பாக கொழும்பில் தமிழர்களை குறிவைத்து இவை நடைபெறுகின்றன. இதை நான் பொறுப்புடன் கூறுகிறேன்.

இவ்விடத்தில் இடைமறித்த அமைச்சர் டிரான் அலஸ், எம்.பி அவர்களே, இது எப்போதும் நடக்கும் ஒரு கைங்கரியம். வெளியூரில் இருந்து ஒருவர் கொழும்புக்கு வருவார் என்றால் அதை அறிய பொலிஸ் தகவல் சேகரிக்கிறார்கள். இது இங்கே மட்டுமல்ல, நாடு முழுக்க நடக்கிறது. தமிழர்களை மட்டுமல்ல, சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற எல்லோர் வீடுகளுக்கும் பொலிஸ் போகிறது.

இதன்போது குறுக்கிட்ட மனோ கணேசன் எம்பி, இல்லை, இல்லை. தமிழர்களையே இது அதிகம் குறிவைக்கிறது. சும்மா இங்கே வந்து கூறுவதற்கு எனக்கு என்ன பைத்தியமா? நீங்கள் சொல்வது போல், இது நாடு முழுக்க நடக்கவில்லை. சும்மா சொல்ல வேண்டாம். இங்கே உள்ள ஏனைய 225 எம்.பிகளிடம் கேட்டு பாருங்கள். நாடு முழுக்க இது நடக்கவில்லை. கொழும்பில் நடக்கிறது. இதை நியாயப்படுத்த முயல வேண்டாம். உண்மையில் இங்கே மக்கள் மட்டத்தில் என்ன நடக்கிறது என உங்களுக்கு தெரியவில்லை. ஆனால், எனக்கு தெரிகிறது. ஏனெனில் நான் மக்கள் மட்டத்தில், மத்தியில் இருப்பவன். இதை நீங்கள் நியாயப்படுத்த முயல வேண்டாம் என்றார்.

# நாணய நெருக்கடியில் இலங்கை ஆபத்தில்

## ஜப்பானிய வங்கி எச்சரிக்கை

நாணய நெருக்கடியில் இலங்கை உட்பட 7 நாடுகள் ஆபத்தில் இருப்பதாக ஜப்பானிய வங்கி ஒன்று எச்சரித்துள்ளது.

நொமுரா ஹோல்டிங்ஸ் என்ற ஜப்பானிய உயர்முகவரக வங்கி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதன்படி, இலங்கை, எகிப்து, ரொமேனியா, துருக்கி, செக் மக்கள் குடியரசு, பாகிஸ்தான் மற்றும் ஹங்கேரி ஆகியனவே நாணயப் பிரச்சினையில் ஆபத்தில் இருப்பதாக குறித்த வங்கி குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானிய வங்கி வழங்கியுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி, நாட்டின் வெளிநாட்டு நாணய கையிருப்பு, நாணய மாற்றுவிகிதம், நிதி உறுதிப்பாடு மற்றும் வரி விகிதங்கள் என்பன இதன்போது கருத்தில் எடுக்கப்படுகின்றன.

நொமுரா வங்கியின் மதிப்பெண்களின் அடிப்படையில், எகிப்துக்கு மோசமான மதிப்பெண்ணாக 165 வழங்கப்பட்டுள்ளது.

ரொமேனியாவுக்கு 145 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை, துருக்கி ஆகியவற்றுக்கு 138 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், செக் மக்கள் குடியரசு, பாகிஸ்தான், மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு முறையே 126, 120 மற்றும் 100 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.




**செய்தி:-**

மன்னன் நரேந்திர சிங்கன் அன்று நாட்டின் சட்டத்தை மதித்து25மணல் மூடைகளை சுமந்து பத்தினியம்மன் கோவிலுக்கு சென்றான்.

**லக்ஷ்மன் கிரியல்ல**
**பா.உ. ஐக்கிய மக்கள் சக்தி**

நம்மட அரசியல் வாதிகளுக்கு என்ன குற? டொலர் மூட்டைகளோட அடிக்கடி பறக்கிறதானே?

# மத்திய கிழக்கில் வேலை பெற்றுச் சென்ற 144 பெண்கள் நிர்க்கதியான நிலையில்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தகவல்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதியில்லாமல் ஓமானுக்கு சென்ற 77 பெண்களும் டுபாய்க்கு சென்ற 77 பெண்களும் பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக செலவை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொறுப்பேற்கவுள்ள நிலையில் ஒருவருக்கு சுமார் 10 இலட்சம் ரூபா வரையில் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் கூடிய நிலையில் சுற்றுலா வீசாவில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும், ஓமானுக்கும் சென்று தொழிலை தேடுதல் செயற்பாடுகளில் நிர்க்கதியாகியுள்ள பெண்கள் தொடர்பில், அறிக்கை ஒன்று சமர்ப்பித்த போதே வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

இது தொடா்பில் அவா் மேலும் கூறுகையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் பணியகத்தின் அனுமதியில்லாமல் சென்றவர்களில், ஓமானில் 77 பெண்களும் டுபாயில் 77 பெண்களும் பாதுகாப்பு இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக ஒருவருக்கு சுமார் 10 இலட்சம் ரூபா வரையில் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செலவை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொறுப்பேற்கவுள்ளது. இதற்கான அனுமதி அமைச்சரவையின் ஊடாக பெறப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களை அழைத்து வருவதற்கு முன்னர், குற்றப்புலனாய்வுத் துறையினரை அங்கு அனுப்பி அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து, குற்றம் புரிந்தோரை கண்டுபிடிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தநிலையில் சுற்றுலா வீசாவில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்று அங்கிருந்து எல்லையின் ஊடாக ஓமானுக்கு பெண்களை அழைத்துச்சென்ற குற்றச்சாட்டின்பேரில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து 190 பெண்களை அனுப்பவிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்ட போதும், சட்டத்தரணிகளின் முயற்சிகளால் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் அமைச்சா் தெரிவித்தார்.

ஓமான் பாதுகாப்பு இல்லத்தில் தங்கியுள்ள பெண்பணியாளர்களில் 12 பேர் மாத்திரமே பதிவு செய்தவர்கள் ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்தில் தற்போது தங்கியுள்ள இலங்கைப் பெண்கள் தொடர்பிலான அறிவிப்பை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 77 இலங்கைப் பெண்களில் 12 பேர் மாத்திரமே வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5000/= ரூபா கொடுப்பனவு



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவை குறைக்கவோ அல்லது இரத்து செய்யவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை (21) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது கூறியுள்ளார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதேசங்களில் இதற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இந்தக் கொடுப்பனவு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதிக்கு இந்தக் கொடுப்பனவுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முன்னாள் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் காலமானார்



முன்னாள் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தனது 79 ஆவது வயதில் இன்று (23) காலை நுவரெலியாவில் அவரது இல்லத்தில் வைத்து காலமானார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவராகப் பணியாற்றிய முத்து சிவலிங்கம் அக்கட்சியின் மூத்த உறுப்பினராவார்.

1994 முதல் 2010 வரை இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2010 ஆம் ஆண்டு தேர்தலில் இவர் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

முத்து சிவலிங்கம் 2015 பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்பாளராக நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 45,352 விருப்பு வாக்குகள் பெற்று பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்த மக்கள்



வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவ முகாமிற்கு அருகேயுள்ள காணியினை துப்பரவு செய்யும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் சிரமதான வேலைகள் இன்று (23.11.2022) காலை ஆரம்பிக்கப்பட்டது.

இன்று காலை பத்து முப்பது மணி அளவில் ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தினை அண்மித்த வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் மக்கள் சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## பத்தோடு பதினொன்றாக கடந்து போகும் பெண்கள் மீதான வன்முறைகள்!

'உலகில் ஒவ்வொரு 11 நிமிடத்திற்கும் ஒரு பெண் அல்லது சிறுமி அவருடைய காதலன் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்படுகிறார்' என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கவலை தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் வரும் வெள்ளிக்கிழமை நவம்பர் 25 அனுஷ்டிக்கப்பட உள்ள வேளையில் அவர் இதனை தெரிவித்தார்.

'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையை எடுக்க வேண்டிய நேரமிது. இதுபோன்ற வன்முறைகளை வரலாற்று புத்தகங்களில் ஏற்றவேண்டும்' என்று அவர் அழைப்பு விடுத்தார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை என்பது உலகின் மிகப் பரவலான மனித உரிமை மீறலாக மாறியுள்ளது. ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி அவருடைய காதலன் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொலை செய்யப்படுகிறார். கொரோனா பாதிப்பு முதல் பொருளாதார சரிவு வரையிலான தாக்கங்கள், தவிர்க்கமுடியாத வன்முறைகளையும் அவர்கள் மேல் திணித்துள்ளது

இதில் பெண்கள் மற்றும் சிறுமிகள் வெறுப்பு பேச்சு, பாலியல் ரீதியில் மற்றும் இணையவழியில் என பலவகை துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். பெண்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம், சமமான பொருளாதார மீட்சி, உலகின் தேவையான நீடித்த வளர்ச்சி ஆகியவற்றையும் இந்த வன்முறைகளும், பாகுபாடும் தடுக்கின்றன.

இந்த வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரமிது. அதாவது, பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அரசுகள் சிறந்த திட்டங்களை வடிவமைத்து, நிதி ஒதுக்கி, தேசிய அளவிலான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கைகளின் ஒவ்வொரு நிலைகளிலும் சமூக குழுக்கள் உள்ளிட்ட அடிநிலை அமைப்புகளையும் ஈடுபடுத்த வேண்டும் என்பதோடு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதையும் மதிக்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்படுபவர்களுக்கு ஆதரவும் நீதிக்கான உரிமையும் காக்கப்படுகிறது என்ற உணர்வு ஏற்படும்.

பெண்கள் உரிமைகள் அமைப்புகள் மற்றும் இயக்கங்களுக்கான நிதியை வரும் 2026-க்குள் 50 சதவீதமாக அரசுகள் உயர்த்த வேண்டும். மேலும், பெண்களின் உரிமைகளுக்கான ஆதரவு குரலை நாம் அனைவரும் எழுப்ப வேண்டும். அனைவரும் பெண்ணியவாதிகள் என பெருமையுடன் அறிவிக்க வேண்டும். ஆணாதிக்கத்தை சவால்விடும் வகையிலான பொதுப் பிரசாரங்களை ஆதரித்து, பெண் வெறுப்பு மற்றும் வன்முறைகளை தடுக்க வேண்டும் என்று குட்டெரெஸ் தெரிவித்தார்

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான செயல்பாடு என்ற இந்த ஆண்டுக்கான சர்வதேச தின கருப்பொருளை குறிப்பிட்ட அன்டோனியோ குட்டெஸ், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாகவும் மாற்றத்துக்கு அழைப்பு விடுக்கும் உலகம் முழுவதும் உள்ள சமூக செயல்பாட்டாளர்களுக்கு துணை நிற்போம்' என்பதே அந்த கருப்பொருளின் அர்த்தம்' என்றும் மேலும் தெரிவித்தார். இந்த நிலையில் பொருளாதார நெருக்கடியால் ஓமானுக்கு சென்று பாலியல் கொடுமையில் இருந்து மீட்கப்பட்ட நிலையில் அங்கும் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளான இலங்கை பணிப்பெண்கள் இந்த இடத்தில் வேதனையோடு நினைவு கூரப்படவேண்டியவர்கள். போதைப்பொருள் பாவனை அதிகரித்த குடும்பங்களை சேர்ந்த பெண்கள் கரிசனைக்கு உரியவர்கள்.



நன்றி: டெய்லி மிரர்

# இலவுகாத்த கிளியாகும் தமிழ் அரசியல் தலைமைகள்

பவித்திரா

தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வந்தால் தீர்வு தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்த இந்த நேரமும் தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதியாக அறிவித்திருக்கின்றார். இதே கருத்தை தான் முன்னர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் தெரிவித்திருந்தார்.

### ஒற்றுமையில்லா தமிழ்த்தரப்பு

தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வர மாட்டாது என்பதை நன்கு உணர்ந்து கொண்ட ஒருவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது காய் நகர்த்துகின்றார் என்பது தெரிகின்றது. இதனை அறிவித்திருப்பதன் மூலம் வந்து இப்போது தமிழ் கட்சியுடன் பக்கத்திற்கு வந்திருக்கின்றது.



தமிழ் கட்சிகள் இதனை எவ்வாறு அடித்து ஆடப் போகின்றன என்பதைத் தான் அனைவரும் அவதானித்துக் கொண்டு இருக்கிறார்கள். தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தியது தான் என காட்டிக் கொள்வதற்கு கூட்டமைப்பில் பேச்சாளர் சுமந்திரன் மேற்கொண்ட முயற்சி பிசுபிசுத்து போனதை கடந்த வாரத்தில் நாம் காணக்கூடியதாக இருந்தது.

தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்த சுமந்திரன் சம்பந்தன் வீட்டில் காத்திருந்த போது பேச்சு வார்த்தைக்கு யாருமே வராத நிலைமை காணப்பட்டது. தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மட்டுமே அப்போது அங்கு வந்திருந்தார்.

சிபி விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்களையும் இந்த பேச்சு வார்த்தைக்கு சுமந்திரன் அழைத்திருந்தார் இருந்த போதிலும் அவர்கள் இந்த பேச்சு வார்த்தைக்கான அழைப்பை பொருட்படுத்தாமல் இருந்தமைக்கு சில காரணங்கள் கூறப்பட்டது.

இவ்வாறான பேச்சு வார்த்தை ஒன்றுக்கு அழைப்பதற்கான தகுதி சுமந்திரனுக்கு இல்லை என சில கருத்துக்கள் வெளியிடப்பட்டன. சம்பந்தன் இல்லத்தில் நடைபெறும் பேச்சு வார்த்தைக்கு வர முடியாது என சில தலைவர்கள் சொன்னதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனை விட சந்திப்புக்கு போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் சம்பந்தன் மாவை சுமந்திரன் ஆகியோர் சந்தித்த போது அடுத்த பேச்சுவார்த்தைக்கான அழைப்பை மாவை சேனாதிராஜாவே விளக்க வேண்டும் என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதே வேளையில் சம்பந்தனின் இல்லத்தில் இல்லாமல் பொதுவான வருடத்தில் சந்திப்பை நடத்தலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மற்றொரு இடத்தில் நடைபெறக்கூடிய சந்திப்புக்கும் தன்னால் வரக்கூடியதாக இருக்கும் என சம்பந்தன் கூறியிருந்தார். இதனை விட போதிய அவகாசத்துடன் சந்திப்புக்கான அழைப்பை விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்த பின்னணியிலேயே எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழ் கட்சிகளிடையான சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த சந்திப்பிற்கு விக்னேஸ்வரனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் வருவதற்கு விளக்கம் தெரிவித்து இருக்கின்ற போதிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதில் கலந்து கொள்ள மாட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

> விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்களையும் இந்த பேச்சு வார்த்தைக்கு சுமந்திரன் அழைத்திருந்தார் இருந்த போதிலும் அவர்கள் இந்த பேச்சு வார்த்தைக்கான அழைப்பை பொருட்படுத்தாமல் இருந்தமைக்கு சில காரணங்கள் கூறப்பட்டது. இவ்வாறான பேச்சு வார்த்தை ஒன்றுக்கு அழைப்பதற்கான தகுதி சுமந்திரனுக்கு இல்லை என சில கருத்துக்கள் வெளியிடப்பட்டன. சம்பந்தன் இல்லத்தில் நடைபெறும் பேச்சு வார்த்தைக்கு வர முடியாது என சில தலைவர்கள் சொன்னதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனை விட சந்திப்புக்கு போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மிகுதி 13 ஆம் பக்கத்தில்...



# இந்தோனேசியாவில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு 268 ஆக உயர்வு

## சியாஞ்சூர் பகுதியில் 151 பேரை காணவில்லை



இந்தோனேசியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 268 ஆக அதிகரித்துள்ளது. 151 பேரை காணாததால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. அங்கு மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடக்கின்றன.

இந்தோனேசியாவில் உள்ள ஜாவா தீவின் மேற்கு பகுதியில் கடந்த 21-ம் திகதி மதியம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5.6 புள்ளிகளாக பதிவானது. நிலநடுக்கம் ஏற்பட்ட பிறகு சுமார் 2 மணி நேரத்துக்கு லேசான அதிர்வுகள் 25 முறை ஏற்பட்டதாக இந்தோனேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் மையம் கொண்டிருந்த சியாஞ்சூர் பகுதியில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள், கட்டிடங்கள், 50-க்கும் மேற்பட்ட பள்ளிகள் சேதமடைந்துள்ளன. கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 268 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் என மேற்கு ஜாவா ஆளுநர் ரித்வன் கமில் தெரிவித்துள்ளார்.

சியாஞ்சூர் பகுதியில் 151 பேரை காணவில்லை. இதனால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தால் 1,000-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். இவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சியாஞ்சூர் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், 58 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். ஆங்காங்கே கூடாரங்கள் அமைத்து, இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அதிகாரிகள் செய்து கொடுத்துள்ளனர்.

பசிபிக் பெருங்கடலில் நிலநடுக்கம் அடிக்கடி ஏற்படும் பகுதியில் இந்தோனேசியா அமைந்துள்ளது. இங்கு கடந்த2004 டிசம்பரில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 9.1 புள்ளிகளாக பதிவானது. இதனால் 14 நாடுகளில் சுனாமி தாக்கியது. இதில் 2.26 லட்சம் பேர் உயிரிழந்தனர். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இந்தோனேசியாவை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு ஈரானின் பிரபல நடிகைகள் இருவர் கைது



ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த பிரபல நடிகைகள் இருவரை அந்நாட்டு அரசு கைது செய்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹென்காமெஹ் காசியானி, காதாயூன் ஆகியோர் ஈரானின் பிரபல நடிகைகள். இருவரும் சர்வதேச அளவில் சிறந்த நடிகர்களுக்கான விருதுகளை வென்றவர்கள். இவ்விருவரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தங்கள் சமூக வலைத்தளம் பக்கங்களில் பதிவிட்டு வந்தனர். தங்களது நடவடிக்கைகளுக்காக இருவரும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகின. இதுகுறித்து ஹென்காமெஹ் காசியானி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் குறிப்பிடும்போது, இந்த நிமிடத்திலிருந்து, எனக்கு என்ன நடந்தாலும், எப்போதும் போல, எனது கடைசி மூச்சு வரை நான் ஈரானிய மக்களுடன் இருக்கிறேன் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள நினைக்கிறேன்'' என்று பதிவிட்டிருந்தார்.

இந்தநிலையில், பொதுவெளியில் தங்களது ஹிஜாப்பை நீக்கியதற்காக ஹென்காமெஹ் காசியானி, காதாயூன் ஆகியோரை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர். இருவரது கைது நடவடிக்கையும் ஈரானில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



# 2030 க்குள் மனிதர்கள் நிலவில் வாழலாம்: நாசா

2030-க்குள் மனிதர்கள் நிலவில் வாழலாம், பணி செய்யலாம் என நாசா தெரிவித்துள்ளது.

புதுமையான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்பைக் காட்டிலும் துல்லியமான முறையில் நிலவை ஆராய்ச்சி செய்யும் நோக்கில் ஆர்டெமிஸ் திட்டத்தை நாசா கையில் எடுத்திருந்தது. அதன்படி ஆகஸ்ட் மாதமே ஆர்டெமிஸ் ஏவுகணையை விண்ணில் செலுத்த நாசா தயாராகி இருந்தது. எனினும் இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் நிலவுக்கு ஆர்டெமிஸ் ஏவுகணையை நாசா விண்ணில் செலுத்தியது.

இது குறித்து அமெரிக்க ஓரியன் சந்திர விண்கலத் திட்டத்தின் தலைவர் ஹோவர்ட் ஹூ, கூறும்போது, 2030 ஆம் ஆண்டுக்கு முன் மனிதர்கள் நிலவில் வாழலாம். அங்கு அவர்களுக்கு தேவையான பணியை செய்யலாம். இது நாசாவுக்கு வரலாற்று நாள். அது மட்டுமல்ல விண்வெளி ஆராய்ச்சிகளை விரும்பும் அனைவருக்கும் இது சிறந்த நாள். அதாவது, நாம் சந்திரனுக்குத் திரும்பிச் செல்கிறோம். அதற்காகவே இந்த நிலையான (ஆர்டெமிஸ் ) திட்டத்தை நோக்கி செயற்படுகிறோம். இது மக்களை சுமந்து செல்லும் வாகனமாகும், அது மீண்டும் நிலவில் நம்மைத் தரையிறக்கும் என்றார்.

முன்னதாக, கடந்த 1969 ஜூலை 20-ம் தேதி அமெரிக்காவின் அப்போலோ 11 விண்கலம் நிலவில் தரையிறங்கியது. அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் முதல் மனிதராக நிலவில் கால் பதித்தார். வரும் 2024-ம் ஆண்டுக்குள் மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப நாசா தீவிரமாக பணியாற்றி வருகிறது. இதற்காக ஓரியான் (ஞசுஐழுழு) என்ற விண்கலத்தை நாசா உருவாக்கியது. இந்த விண்கலம் கடந்த 2014-ம் ஆண்டில் ஆளில்லாமல் விண்வெளிக்கு செலுத்தப்பட்டு பத்திரமாக பூமிக்கு திரும்பியது. இந்த நிலையில் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் ஆர்டெமிஸ் திட்டத்தில் நாசா ஆர்வம் காட்டி வருகிறது.

# தற்காலிக விசாவிலுள்ள அகதிகள் வெளிநாடு செல்வதற்கான நடைமுறை இலகுவாகிறது

ஆஸ்திரேலியாவில் தற்காலிக விசாக்களில் உள்ள அகதிகள், தமது குடும்பத்தினரைச் சந்திக்க வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான வாய்ப்பு இலகுவாக்கப்படவுள்ளது.

இதுகுறித்த அறிவிப்பை குடிவரவுத்துறை அமைச்சர் அன்று கில்ஸ் அண்மையில் வெளியிட்டிருந்தார். இதன்படி ஒரு தசாப்த காலமாக தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்திருக்கும் சுமார் 19,000க்கும் மேற்பட்ட அகதிகள், தமது குடும்பத்தினரைச் சந்திப்பதற்காக வெளிநாடுகளுக்கு(மூன்றாவது நாடொன்றிற்கு) செல்வது இலகுவாகவுள்ளது.

அகதிகளாகக் கண்டறியப்பட்டு தற்காலிக பாதுகாப்பு விசாக்கள் TPV அல்லது SHEV விசாக்களில் ஆஸ்திரேலியாவில் இருப்பவர்களுக்கு இந்தக் கொள்கை பொருந்தும். அதேபோன்று ஜூலை 19, 2013க்கு முன் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர்களில் நிரந்தர விசாவைப் பெற்றுக்கொண்டவர்கள், தமது குடும்பங்களுடன் ஒன்றிணைவதற்கான (family reunion) நடவடிக்கைக்கு குறைந்த முன்னுரிமை வழங்கப்படும் நிலையில் இதனையும் அரசு திருத்தியமைக்கவுள்ளது.

தற்போதுள்ள பயண அனுமதிக் கொள்கையின்படி, தற்காலிக விசாவில் உள்ள அகதிகள், பல ஆண்டுகளாகத் தாங்கள் பிரிந்திருக்கும் வாழ்க்கைத் துணைவர்கள், குழந்தைகள் அல்லது பெற்றோரைச் சந்திக்க மூன்றாவது நாடொன்றிற்குச் செல்ல முயற்சிக்கும்போது, மிக முக்கியமான காரணம் இருந்தால் மட்டுமே அதற்கான பயண அனுமதி வழங்கப்படும். இனி இந்தக் கட்டுப்பாடு இலகுவாக்கப்படவுள்ளது. அதேபோன்று Direction 80 காரணமாக, படகு மூலம் வந்த அகதிகளுக்கு குடும்ப மறுஇணைவுக்கான விண்ணப்பங்களில் மிகக்குறைந்த முன்னுரிமை வழங்கப்பட்டபடியால், பலர் தமக்கு நிரந்தர விசா கிடைத்தும் தமது குடும்பங்களை ஆஸ்திரேலியாவிற்கு அழைப்பதில் நீண்ட தாமதம் நிலவிவந்தது. தற்போது இவ்விரு நடைமுறைகளையும் திருத்தியமைப்பதற்கு புதிய லேபர் அரசு முன்வந்துள்ளமையை வரவேற்பதாக Refugee Council of Australia தெரிவித்துள்ளது.

இதேவேளை TPV மற்றும் SHEV ஆகிய இரு தற்காலிக விசாவுடன் நாட்டிலுள்ள 19,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர விசா வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கின்றபோதிலும், அதனை விரைவாக வழங்கவேண்டுமென அவுஸ்திரேலிய அகதிகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

# அதிகம் தண்ணீர் குடித்ததால் புரூஸ் லீ இறந்திருக்கலாம்

## 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஆய்வில் தகவல்

மறைந்த பிரபல நடிகரும், தற்காப்புக் கலையின் ஜாம்பவானுமான புரூஸ் லீ, அதிக அளவு தண்ணீர் குடித்ததால் இறந்திருக்கலாம் என ஒரு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வானைச் சேர்ந்த புரூஸ் லீ 1950-ல் பிறந்தார். தற்காப்புக் கலைகளில் வல்லவரான இவர் 'என்டர் தி டிராகன்' உள்பட பல ஹாலிவுட் படங்களில் தற்காப்புக் கலையைப் போற்றும் விதத்தில் நடித்து புகழ்பெற்றார். 1973-ல் தனது 32-வது வயதில் அவர் பெருமூளை வீக்கம் காரணமாக இறந்தார். அப்போது, வலி நிவாரணி மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால் மூளையில் வீக்கம் ஏற்பட்டு இறந்ததாக மருத்துவர்கள் நம்பினர்.

அப்போது புரூஸ் லீயின் மரணத்துக்கு வேறு சில காரணங்களும் கூறப்பட்டன. சீனாவைச் சேர்ந்த நிழல் உலக தாதாக்களால் அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும், பொறாமை கொண்ட அவரது காதலி விஷம் வைத்து கொன்றிருக்கலாம் என்றும் பல்வேறு வதந்திகள் பரவின.

ஆனால் புரூஸ் லீ மரணமடைந்து சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு, அண்மையில் வெளியான புதிய ஆய்வு முடிவுகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

நடிகர் புரூஸ் லீ அதிக தண்ணீர் குடித்ததால் இறந்திருக்கலாம் என அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. ஸ்பெயினில் சிறுநீரக நிபுணர்கள் குழு நடத்திய இந்த ஆய்வு முடிவுகள் கிளினிக்கல் கிட்னி என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளன. புரூஸ் லீயின் மரணத்துக்கு ஹைபோநட்ரீமியா காரணமாக இருந்திருக்கலாம். அதாவது சிறுநீரகங்கள் உடலில் இருந்து அதிகப்படியான நீரை வெளியேற்ற முடியாமல் அவர் இறந்திருக்கலாம் என ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. அதிகப்படியான தண்ணீரை வெளியேற்ற அவரது சிறுநீரகங்கள் இயலாததால் புரூஸ் லீயின் மரணம் ஏற்பட்டது என்று அந்த முடிவுகள் தெரிவிக்கின்றன.

# மண்டபம் முகாம் ஆட்சியரை மாற்றக்கோரி கைக்குழந்தையுடன்
# இலங்கைத் தமிழர்கள் தர்ணா போராட்டம்

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம் தனித்துணை ஆட்சியர் அடிப்படை வசதிகள் செய்து தரவில்லை என குற்றச்சாட்டி அவரை உடனடியாக பணியிட மாற்றம் செய்ய கோரி இலங்கை தமிழர்கள் தொடர்ந்து பல மணி நேரம் முகாம் நுழை வாயில் அமர்ந்து கைக்குழந்தைகளுடன் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை ஏற்று போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு முகாமிற்குள் சென்றனர்.

இலங்கையில் ஏற்பட்ட இறுதிக் கட்ட போரின் போது தங்கள் உயிர்களை காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கையில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் பலரும் தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் தஞ்சம் அடைந்து கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மண்டபம் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ளனர்.

அதேபோல் இலங்கை தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் அடைக்கலம் தேடி தமிழகத்திற்கு அகதிகளாக வரும் சுமார் 200 பேர் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் தனித்துணை ஆட்சியர் சிவக்குமாரி என்பவர் பணியாற்றி வருகிறார். அவர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களிடம் கடுமையாக நடந்து கொள்வதாகவும், அவர்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய மறுப்பதாகவும், இலங்கைத் தமிழர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் வழங்கவும், தனி பதிவு வழங்கவும் லஞ்சம் கேட்பதாக மண்டபம் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டி வந்த நிலையில் இது குறித்து இலங்கை தமிழர் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மற்றும் ராமநாதபுரம் ஆட்சியரிடம் பல முறை புகார் மனு அளித்துள்ளனர். இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் கும்மிடிப்பூண்டி முகாமில் இருந்து பிரசவத்திற்காக மண்டபம் முகாமில் உள்ள தனது அம்மா வீட்டிற்கு வந்த குடும்பத்தை கைக்குழந்தையுடன் முகாமை விட்டு வெளியே அனுப்பியதாகவும், மண்டபம் முகாமிற்குள் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நான்கு சக்கர வாகனத்தை முகாமிற்குள் கொண்டு செல்ல அனுமதி இல்லை என உத்தரவிட்டதாக சொல்லப்படுகிறது.

இதனை கண்டித்து உடனடியாக மண்டபம் முகாம் தனித்துணை ஆட்சியர் உடனடியாக மாற்ற கோரி நூற்றுகணக்கான இலங்கை தமிழர்கள் மண்டபம் முகாம் நுழைவு வாயிலின் தரையில் அமர்ந்து கைக்குழந்தையுடன் தர்ணா போராட்டம் நடத்தினர்.

இது குறித்து தகவல் அறிந்த ராமேஸ்வரம் துணை காவல் கண்காணிப்பாளர் தனஞ்ஜெயன் மற்றும் மாவட்ட நிர்வாகம் அதிகாரிகள் தர்ணாவில் ஈடுபட்ட இலங்கை தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் தனித்துணை ஆட்சியர் மாற்றி உத்தரவிட்டால் மட்டுமே தர்ணா போராட்டத்தை கைவிடுவதாக திட்டவட்டமாக தெரிவித்து தொடர்ந்து போராட்டம் நடத்தினர்.

இலங்கை தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்று தனித்துணை ஆட்சியர் மீது மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதி அளித்ததன் பெயரில் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் வாசலில் சுமார் நூற்றுக் கணக்கான இலங்கை தமிழர்கள் கைக்குழந்தைகளுடன் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதி பரபரப்பாக காணப்பட்டது.




## அரசு மரியாதையுடன் அவ்வை நடராஜன் உடல் நல்லடக்கம்



தமிழறிஞர் அவ்வை நடராஜன் உடல்நலக்குறைவால் உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, கவிஞர் வைரமுத்து, ஜெகத்ரட்சகன் எம்.பி, தமிழ் அறிஞர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர்.

அவ்வை நடராஜன் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இந்த நிலையில், சென்னை மைலாப்பூரில் உள்ள சுடுகாட்டில் அரசு மரியாதையுடன் 30 குண்டுகள் முழங்க அவ்வை நடராஜன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக அவ்வை நடராஜனின் உடலை கவிஞர் வைரமுத்து,அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் தோளில் சுமந்து வந்தனர். பின்னர் உருக்கத்துடன் இறுதி மரியாதை செலுத்தினர்.

## பாஜகவில் இருந்து காயத்ரி ரகுராம் 6 மாத காலத்துக்கு இடைநிறுத்தம்

### அண்ணாமலை அதிரடி நடவடிக்கை

தமிழக பாஜகவின் வெளிநாட்டு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சிப் பிரிவின் மாநிலத் தலைவர் காயத்ரி ரகுராம் கட்சியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு நீக்கப்படுவதாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

''தமிழக பாரதிய ஜனதா கட்சியின் வெளிநாட்டு மற்றும் அண்டைற மாநில தமிழ் வளர்ச்சி பிரிவின் மாநிலத் தலைவர் காயத்ரி ரகுராம் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியும், கட்சிக்கு களங்கம் விளைவிக்கும் செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதால் கட்சியில் அவர் வகித்து வரும் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் ஆறு மாத காலத்திற்கு நீக்கப்படுகிறார்.

ஆகவே, கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் காயத்ரி ரகுராமிடம் கட்சி சார்பாக எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது' என்று அதில் கூறப்பட்டுள்ளது.


முன்னதாக, 'கட்சியின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர்களைத் தவிர்த்து மற்றவர்கள் யூடியூப் சேனல்களுக்கு நேர்காணல் வழங்க விருப்பப்பட்டால், அதை கட்சியின் ஊடகப்பிரிவுத் தலைவரிடம் தெரியப்படுத்த வேண்டும்.

இனி வரும் காலங்களில் கட்சியின் ஒப்புதல் பெற்றே யூடியூப் சேனல்களுக்கு நேர்காணல் அளிக்க வேண்டும். கட்சி கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்' என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கர்நாடகவில் உள்ள கல்வெட்டுகளையும் தமிழ்நாட்டிற்கு கொண்டுவர வேண்டும்

### வலியுறுத்துகின்றார் சீமான்

கர்நாடக மாநிலத்தில் மீதமுள்ள 45000 தமிழ்க் கல்வெட்டுகளையும் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடக மாநிலம் மைசூரில் இருக்கும் 65,000 தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை 20,000 கல்வெட்டுகள் மட்டுமே தமிழ் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது சற்று ஆறுதல் அளித்தாலும், கல்வெட்டுகளை மீட்பதில் ஏற்பட்டுள்ள தொய்வினைப் போக்கி, மீதமுள்ள கல்வெட்டுகளையும் தமிழகம் கொண்டுவர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஏறத்தாழ 1 இலட்சம் கல்வெட்டுகளில் 60,000க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் தமிழ்க் கல்வெட்டுகளேயாகும். தமிழர்களின் அரசியல், ஆட்சி முறை, வரலாறு, போர் வெற்றிகள், பண்பாடு, கலை, இலக்கியம், வாழ்வியல் ஆகிய அனைத்திற்கும் சான்றாகவும் கல்வெட்டுகள் திகழ்கின்றன. தமிழ் முன்னோர்கள் தங்கள் வாழ்வியலை வருங்காலச் சந்ததியினருக்குக் கடத்தும் உயரிய நோக்கத்தோடு, அன்னைத் தமிழ் எழுத்துக்கள் கொண்டு செதுக்கிய வரலாற்றுப் பதிவுகளாகிய சிறப்புமிக்க தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தும் தொடக்கத்தில் சென்னையிலும், பின்பு உதகமண்டலத்திலும் வைத்துப் பராமரிக்கப்பட்டு வந்தன.

கடந்த 1966-ஆம் ஆண்டு இந்திய ஒன்றிய அரசால் கர்நாடக மாநிலம் மைசூருக்கு தமிழ்க் கல்வெட்டுகள் அத்துமீறிக் கொண்டு செல்லப்பட்டன. அவ்வாறு கொண்டுசெல்லப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தும் முறையாகப் பராமரிக்கப்படாததால் கடந்த 56 ஆண்டுகளாக மெல்ல மெல்ல சிதைந்து அழிந்து வருகின்றன.

அழிவின் விளிம்பில் இருக்கும் தமிழ்க் கல்வெட்டுகளை மீட்கும் பொருட்டு தமிழ்ப் பற்றாளர்களால் தொடரப்பட்ட பொதுநல வழக்கினை விசாரித்த மதுரை உயர்நீதிமன்றக் கிளை 2021ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பில் தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தையும் தமிழ்நாட்டிற்கு மீட்டுக் கொண்டுவர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசிற்கு உத்தரவிட்டது.

ஆகவே, தமிழ்நாடு அரசு இனியும் காலதாமதம் செய்யாமல் மீதமுள்ள 45000 தமிழ்க் கல்வெட்டுகளையும் மைசூரிலிருந்து விரைந்து தமிழ்நாட்டிற்கு மீட்டுக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அத்தோடு, தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தையும் உயர்தர அரங்கமைத்துப் பொதுமக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தி வைப்பதோடு, ஆய்வாளர்கள் பயன்படுத்தும் வகையில் படியெடுத்து இணையத்தில் எளிதாகக் கிடைக்கவும் வழிவகைச் செய்ய வேண்டும்.

மேலும், உயர்நீதிமன்ற ஆணையின்படி தமிழ்க் கல்வெட்டுகளைத் திராவிடக் கல்வெட்டுகள் என்று கூறாமல், இனியாவது தமிழ்க் கல்வெட்டுகள் என்றே ஆவணப்படுத்த வேண்டுமென்றும் நாம் தமிழர் கட்சியின் சார்பாக தமிழ்நாடு அரசினைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தனது அறிக்கையில் சீமான் குறிப்பிட்டுள்ளார்.

## விடுதலையான ராஜீவ் கொலை வழக்கு கைதிகள் நாடு கடத்தப்படுவார்களா?

### ஆவணங்களுக்காக காத்திருக்கும் தமிழக அதிகாரிகள்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் தண்டனைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை நாடு கடத்துவதற்கான இலங்கையின் ஆவணங்களுக்காக திருச்சி காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக் கைதிகள் 4 பேரையும் நாடு கடத்துவது, இலங்கை அதிகாரிகளிடம் இருந்து பயண ஆவணங்கள் பெறுவதை பொறுத்தே அமையும் என்று திருச்சி மாவட்ட ஆட்சியர் எம்.பிரதீப் குமார் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம், ஆவணங்களை வழங்கியவுடன், குறித்த தண்டனைக் கைதிகள், நாடு கடத்தப்படுவார்கள். அதுவரை அவர்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று பிரதீப் குமார் கூறியுள்ளார்.

2022, நவம்பர் 11 ஆம் திகதி இந்திய உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பின்னர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆறு பேரில், இலங்கை பிரஜைகள் நான்கு பேரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற ஆறு பேரையும் விடுதலை செய்யுமாறு 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம், தமிழக அரசு சர்ச்சைக்குரிய வகையில் பரிந்துரைத்ததையடுத்து, 2022 நவம்பர் 11ஆம் திகதியன்று அவர்களை விடுதலை செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் தண்டனை பெற்ற ஏழு பேரில் முதல்வரான பேரறிவாளனை உடல்நிலை சீரின்மை மற்றும் நல்ல நடத்தை காரணமாக விடுதலை செய்து மே 18ஆம் திகதி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலையிலேயே சில மாதங்களில் ஆறு தண்டனைக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# மலேசியாவின் பிரதமர் யார்? நீடிக்கும் அரசியல் குழப்பம்!

## மலாய் ஆட்சியாளர்களை சந்தித்த பின் மாமன்னர் இறுதி முடிவு

மலேசிய நாடாளுமன்றத்துக்கான 15ஆவது பொதுத்தேர்தல் முடிவடைந்து நான்கு நாட்களாகிவிட்டன. எனினும் நாட்டின் அடுத்த பிரதமர் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. மலேசியாவில் இவ்வாறான அரசியல் குழப்பம் ஏற்பட்டிருப்பது இதுதான் முதல் முறை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தேர்தலுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கூட்டணிகளுக்குப் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. அதனால் தொங்கு நாடாளுமன்றம் அமைந்துள்ளது. மலேசிய மாமன்னர் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண அனைத்து விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

முதற்கட்டமாக ஐக்கிய (ஒற்றுமை UNITY GOVERMENT)) அரசாங்கம் அமைக்கலாம் என்ற யோசனையை முன்வைத்துள்ளார் மாமன்னர். கூட்டணிகளுக்கு அப்பாற்பட்டு இந்த ஏற்பாட்டுக்கு அரசியல் கட்சித் தலைவர்களும்



கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளார்.

82 இடங்களைக் கைப்பற்றி உள்ள நம்பிக்கை கூட்டணியின் (பக்காத்தான் ஹராப்பான்) அன்வார் அல்லது 73 இடங்களில் வெற்றி பெற்றுள்ள தேசியக் கூட்டணியின் (பெரிக்கத்தான் நேசனல்) மொஹைதின் யாசின் ஆகிய இருவரில் ஒருவர்தான் பிரதமராக வாய்ப்புள்ளது.

ஆனால் இருவருக்குமே குறைந்தபட்ச பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க பிற சிறிய, உதிரிக் கட்சிகளின் ஆதரவு தேவைப்படுகிறது. அது இன்னும் கிடைக்கவில்லை.


செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணிக்குள் இவ்விரு தலைவர்களும் தங்களை ஆதரிக்கும் எம்பிக்களின் பட்டியலை அரண்மனையில் ஒப்படைக்க வேண்டும் என மலேசிய மாமன்னர் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் திடீர்த் திருப்பமாக அன்வார் இப்ராகிம், மொஹைதின் யாசின் ஆகிய இருவரையுமே அரண்மனைக்கு வரவழைத்து பேசினார் மலேசிய மாமன்னர். அப்போது இரு தரப்பினரும் கூட்டணிகள், கருத்து வேறுபாடுகளை புறந்தள்ளிவிட்டு, நாட்டின் நலன் கருதி ஐக்கிய (ஒற்றுமை) அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இருந்த போதிலும் அது சாத்தியமாகவில்லை.

இதனால், நாளை வியாழக்கிழமை மலாய் ஆட்சியாளர்களின் சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார் மலேசிய மாமன்னர். அரசியல் ரீதியிலான குழப்பங்கள் தலைதூக்கும்போது மலாய் ஆட்சியாளர்கள் ஒன்றுகூடி உரிய தீர்வுகளைக் காண்பது வழக்கமாக உள்ளது. எனவே நாளை ஆட்சியாளர்களின் சந்திப்பு முடிந்த கையோடு, மாமன்னர் முக்கிய முடிவுகளை அறிவிக்கக் கூடும்.

வணக்கம் மலேசியா

## தோல்விக்குப் பின் காற்பந்து போட்டியை ரசிக்கும் முன்னாள் சுகாதார அமைச்சர்



அண்மைய மலேசிய பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுதீன், உலகக்கிண்ணக் காற்பந்துப் போட்டியை ரசித்து வருகிறார்.

எனது பாதை முடிந்துவிடவில்லை. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டிய நேரமிது, அதுவரை தொலைக்காட்சியில் உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டிகளைக் காண ஆவலுடன் இருக்கிறேன் என்று சுங்கை புலோ தொகுதியில் தேசிய முன்னணி வேட்பாளராகப் போட்டியிட்ட கைரி குறிப்பிட்டார்.

பதினான்கு நாள் கடுமையான தேர்தல் பிரசாரத்துக்குப் பிறகு அவர் ஓய்வெடுத்து வருகிறார்.

உண்மையில் சோர்வடைந்துவிட்டேன். தொற்றுநோயை நிர்வகிக்கும்படி என்னிடம் கேட்டுக்கொண்ட பிறகு எனக்கு ஓய்வே இல்லை. கொவிட்-19 தொற்றில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு இரண்டு ஆண்டுகள் சிரமமாக இருந்தது. ஆனால் இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டுக்கு சேவையாற்றியதை பெருமையாகக் கருதுகிறேன். பல நாடுகளைப் போல நமது நாடும் மீண்டு வந்தது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

2020 முதல் சுகாதார மற்றும் அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்க அமைச்சராகப் பொறுப்பு வகித்த திரு கைரி, கொவிட்-19 தொற்று நோயை நிர்வகிப்பதில் முக்கிய பங்காற்றினார்.

15வது பொதுத் தேர்தலில் சுங்கை புலோவில் கடுமையான ஏழு முனைப் போட்டி நிலவியது. பக்கத்தான் ஹரப்பான் வேட்பாளரான ரமணன் ராமகிருஷ்ணனிடம் சுமார் 2,693 வாக்கு வித்தியாசத்தில் அவர் தோல்வி அடைந்தார். தேர்தல் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட அவர், அரசியல்வாதியாக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பகிரங்கமாகப் பரிசீலிக்கப் படுவது வேதனையாக இருக்கிறது, என்றார்.

## இந்திய வம்சாவளியினர் 10 பேர் வெற்றி



இம்முறை தேர்தல் களத்தில் போட்டியிட்ட இந்திய வம்சாவளியினரில் பத்து பேர் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களில் ஒன்பது பேர் அன்வார் தலைமையிலான கூட்டணியைச் சேர்ந்தவர்கள்.

மகாதீர், மலேசிய நாடாளுமன்றத்தில் நீண்ட காலமாக எம்பியாக இருந்து வரும் மூத்த தலைவர் துங்கு ரசாலி, மலேசிய இந்தியர் காங்கிரஸ் கட்சித் தலைவர் விக்னேஸ்வரன், பிரதமர் பதவிக்கான போட்டியில் இருப்பதாகக் கூறிய முன்னாள் அமைச்சர் கைரி ஜமாலுதின் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் தோல்வி கண்டுள்ளனர்.

தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பில் பின் தங்கியிருந்த மொஹைதின் யாசின் தலைமையிலான பெரிக்கத்தான் கூட்டணி, எதிர்பாராத வகையில் கூடுதல் இடங்களில் வெற்றி கண்டுள்ளது.

இவ்வாறு பல ஆச்சரியங்களையும் தெளிவற்ற முடிவுகளையும் வழங்கியுள்ளது இந்தப் பொதுத் தேர்தல். இந்நிலையில், மலேசிய மாமன்னரை அன்வாரும் மொஹைதின் யாசினும் சந்திக்க இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கூட்டணிகளை தாண்டிய ஐக்கிய அரசை அமைக்குமாறு மாமன்னர் அறிவுறுத்து

ஐக்கிய அரசாங்கத்தை அமைக்கும்படி மலேசிய மாமன்னர் கேட்டுக்கொண்டுள்ளதாக பக்கத்தான் ஹரப்பான் கூட்டணித் தலைவர் அன்வார் இப்ராகிம் கூறியுள்ளார்.

தம்மையும் பெரிக்கத்தான் நேஷனல் தலைவர் முகைதீன் யாசினையும் சந்தித்துப் பேசிய பிறகு மாமன்னர் இவ்வாறு கூறியதாக திரு அன்வார் சொன்னார்.

அமைக்கப்படும் அரசாங்கம் அனைத்துக் கட்சிகள், இனங்கள், சமயங்கள் மற்றும் வட்டாரங்களைப் பிரதிநிதிக்க வேண்டும் என்று மாமன்னர் அறிவுறுத்தியுள்ளதாக திரு அன்வார் கூறினார்.

ஐக்கிய அரசாங்கத்தை அமைக்க செல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எங்களுக்கும் மாமன்னர் இறுதி முடிவை எடுக்கவும் சற்று காலஅவகாசம் கொடுங்கள்.

யார் பிரதமராவது என்பது பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. காலியிடம் உள்ளது. அதற்கான விண்ணப்பங்களும் வரவேற்கப்படுகின்றன என்றார் அவர்.

இதற்கிடையே, தேசிய முன்னணிக் கூட்டணியின் 30 நாடாளுமன்ற உறுப்பினர்களை மாமன்னர் புதன்கிழமை தனித் தனியாக சந்திக்கவிருந்தார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கோரும் தலைவர் யார் என்பதை உறுதிப்படுத்த இந்தச் சந்திப்பு இடம்பெறவிருக்கிறது.

## முன்னாள் பிரதமர் மகாதீர் படுதோல்வி 53 வருட அரசியலில் முதல் பின்னடைவு

மலேசிய முன்னாள் பிரதமர் மகாதீர் தாம் போட்டியிட்ட தொகுதியில் தேர்தல் வைப்புத் தொகையை இழந்து படுதோல்வி கண்டுள்ளார்.

24 ஆண்டுகள் அவர் பிரதமராக இருந்துள்ளார். கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மகாதீர் லங்காவி தொகுதியில் போட்டியிட்டு வென்றார். இம்முறை அத்தொகுதியைத் தக்க வைக்க அவர் களமிறங்கினார்.

எனினும் இம்முறை அவருக்கு 4,566 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. மகாதீரை எதிர்த்துப் போட்டியிட்ட பெரிக்கத்தான் கூட்டணி வேட்பாளர் 25,463 வாக்குகளைப் பெற்று வெற்றியைப் பதிவு செய்தார். மிகக் குறைவான வாக்குகளைப் பெற்ற டாக்டர் மகாதீர், வைப்புத்தொகையை இழந்தார். ஐந்து முனை போட்டியில் மகாதீர் நான்காவதாகவே வந்தார். 97 வயதான மகாதீர் கடந்த 1969ஆம் ஆண்டு முதன்முறையாக தேர்தலில் போட்டியிட்டு வென்றார். அப்போது முதல் அவர் எந்தத் தேர்தலிலும் தோல்வியைத் தழுவியதில்லை. ஏறக்குறைய 53 ஆண்டுகளாக அவர் தேர்தலில் வெற்றி பெற்று வந்துள்ளார்.

15ஆவது பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றால் தாம் மீண்டும் பிரதமர் பதவிக்குப் போட்டியிட வாய்ப்புள்ளதாகவும் ஒருவேளை தோல்வி கண்டால் அரசியலில் இருந்து ஓய்வுபெறப் போவதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

இது அவரது அரசியல் பயணத்தில், தேர்தல் களத்தில் அவர் சந்தித்துள்ள முதல் தோல்வி.



# பால்ய நினைவுகளில் கடந்து போக முடியா கரமல் புடிங்




ஒரு நாட்டினதும், சமூகத்தினதும் அச்சாணியாக இருக்கும் 'சிறுவர்கள் கொண்டாடப்படுவது சிறப்பம்சமாகும். 'சிறுவர்கள்'என்றென்னும் போதே நம்முடைய சிந்தனைகள் கடந்த கால நினைவலைகளை நோக்கிப் பயணிக்கிறதல்லவா? இத்தகைய பெறுமதி மிக்க சிறு வயது பராயம்

இன்றைய சிறுவர்களுக்கு எவ்வாறுள்ளது? என்று அணுகுவோமானால் முன்னைய காலத்து 'சிறார்களது' வாழ்க்கை நெறிமுறைகள் மற்றும் அனுபவங்களில் இருந்து முற்றும் முழுவதும் வேறுபட்டதாகவே தற்கால 'சிறார்ப்' பருவங்கள் நகர்கின்றன. இன்றைய சிறுவர்களது 'கூடி வாழ்தல்' மற்றும் ஆக்க பூர்வமான சிந்தைகளுக்கு மட்டுப்படுத்தும் விதமாகவே இன்றைக்கு சமூக நடத்தைகள் மாற்றமடைந்துள்ளது. காரணம் மிக துரிதமாக அதிகரித்து வரும் நவீனத்துவங்களும், தொழில் நுட்ப பார்வைகளுமே.

**சிறார்களுக்கு நட்புறவான சூழல்**
**உலகை மிளிரச் செய்யும்**
**'அழகிய தேசம்'**



சிறு வயதில் சிறார்கள் ஆரோக்கியமாகவும், அன்பான மற்றும் நேர் எண்ணங்கள்

கொண்ட ஒரு சூழலில் வாழ்கின்ற போது தான் எதிர் காலமும் வளமானதாக அமையும். இன்றிருக்கும் எல்லா குழந்தைளும் தான் நாளைய தேசத்தை கட்டியமைக்கப் போகும் எதிர்கால தூண்களாகின்றனர். ஆக ஒவ்வொரு

பெற்றோரும் தத்தமது சிறாரது மழலைப் பருவம் ஏன் இன்றியமையாதது? என்றும் மழலைப் பருவம் ஆரோக்கியமானதாக அமைய தவறும் பட்சத்தில் சிறாரது எதிர்காலம் பாதிப்புறும் என்பதையும் அறிந்திருத்தல் அவசியம். இதனால் தான் உலகின் சிறந்த நாடுகள் தமது நாட்டின் சிறுவர்களை பாதுகாக்கவும், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து வளவாய்ப்புக்களிலும் அதிகம் கவனம் எடுத்துக் கொள்கின்றது.

சிறுவர்களை பாதுகாப்போம் சிறுவர் பராயமானது கள்ளம், கபடமற்ற, மகிழ்ச்சியான கற்றறிந்து தெரிந்து கொள்ளும் பருவமாகும். மகிழ்ச்சியாக இவர்களைப் பார்த்துக் கொள்ளும் போது தான் எதிர் காலத்தில் திறமை மிக்கவர்களாகவும், நல்ல ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் வளர்வார்கள்.

சிறுவர் போசணையில் மந்தமும் அசமந்தமும் உயிர்களின் உரமாகவும், ஆரோக்கியத்தின் அச்சாணியாகவும் போஷாக்கு அமைவதால் அடிப்படைத் தேவைகளில் அகில அளவிலும் 'உணவே' முதன் நிலை முக்கியத்துவம் பெறுகிறது. ஆரோக்கியமான சமூகத்தின் ஆணி வேர்களாக சிறுவர்கள் இருப்பதனால் சிறுவர் போசணையில் பன் மடங்கு கரிசனை கட்டாயமாகிறது. பொதுவாக சிறு வயது முதலே குழந்தைகளுக்கு அந்தந்த பருவ நிலையில் கிடைக்கும் உணவுகளை சாப்பிடக் கொடுத்தாலே உடல் வளர்ச்சி நன்றாக இருக்கும். ஆக, உலகில் ஒரு பகுதி மிதமிஞ்சிய உணவு உற்பத்தியில் மிகை ஊட்டத்தையும் மறு பகுதி பட்டினியால் பாதிக்கப்பட்டு குறை ஊட்டத்தையும் அனுபவிக்கிறது. ஆகையால் உலகளவில் உணவூட்டம் மற்றும் சுகாதார பராமரிப்பில் சமனிலையை உருவாக்குகின்ற போதே ஊட்டச்சத்து குறைபாட்டு நாணயத்தின் எதிரெதிர்ப் பக்கங்களான போசணையின் மந்தமும், அசமந்தமும் முற்றாக அஸ்தமிக்கும்.

எதிர் கால தேசத்தின் தூண்கள்

சிறு மலராக மலர்ந்து எதிர்காலம் பற்றிய கனவுகளுடன் வளரும் பிஞ்சுக் குழந்தைகளை பாதுகாத்து, பூங்காவாக பூத்துக் குலுங்க விடுவதை விட்டு அவர்களை நசுக்கி எதிர்காலத்தை வெறும் சருகுகளாக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும்.

விடுதலைக் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன் போன்றோர் இன்றைய நிலையை கண்டால் என்ன சொல்வார்கள்?

ஒரு கலி காலத்தில் நாமிருக்கிறோம் என்றால் அது பொய்யல்ல. சிறுவர்களுக்கான ஒளிமயமான எதிர் காலத்தினை உருவாக்குவதற்கு அதற்கான திட்டங்களை வரைவதற்குமான நேரம் இப்பொழுது கனிந்துள்ளது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டியுள்ளது.

**சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்குடன் இந்த வார சமையல் குறிப்பு**

**கரமல் புடிங்**

**தேவையானவை**

**1 பசும் பால் - 1 லீட்டர்**
**2 முட்டை - 10**
**3 வெள்ளைச் சீனி -**
**12 மேசைக்கரண்டி**
**4 வெனிலா எசன்ஸ் - 1தேக்கரண்டி**
**5 உப்பு - ஒரு சிட்டிகை**
**கரமல் செய்ய**
**வெள்ளைச் சீனி -மேலதிகமாக 6 மே.க**

**செய்முறை**

கரமல் செய்யுங்கள் சீனியுடன் 1மேசைக்கரண்டி தண்ணீர் விட்டு அடுப்பில் காய்ச்சவும். ஒட்டும் பதம் வந்ததும் புடிங் செய்யும் பாத்திரத்தில் ஊற்றி ஆற வைக்கவும். இன்னொரு பாத்திரத்தில் முட்டைகள், உப்பு, சீனி, வெனிலா எசன்ஸ் சேர்த்து கேக் பீட்டரால் நன்றாக அடிக்கவும். பாலைக்காய்ச்சி ஆறவிட்டு முட்டைக் கலவையுடன் சேர்த்து. இதனை கரமல் ஊற்றி வைத்துள்ள புடிங் பாத்திரத்தில ஊற்றி மூடி போட்டு

15– 20 நிமிடங்கள் ஆவியில் வேக வைத்து எடுத்து கொஞ்ச நேரம் குளிர்சாதனப் பெட்டியிலும் வைத்திருந்து பின்னர் பரிமாறவும்.

மேற் சொன்ன முறையில் தனித் தனி கப்பு களிலும் நீங்கள் செய்திடலாம்.



பிரமிளா நாகேஸ்வரராஜா



# கலைகள் கடந்துபோகும் நாடுகளின் வரை படங்கள்...

**? நடனத்துறைக்கே உங்களது வாழ்க்கையை அர்ப்பணத்திருக்கின்றீர்கள் என கொள்ளலாமா?**

ஆம் நிச்சயமாக

நான்கு வயதில் ஆரம்பித்த எனது நடன வாழ்க்கை 37வருடங்களாக தொடர்கின்றது.

நிறைந்த ஆசை ஆர்வத்துடனும் கனவுகளுடனும் ஆரம்பித்து இன்று பல மாணவர்களை கலைஞர்களாக உருவாக்கி வருவதில் சவால்களும் போராட்டங்களும் இருந்தாலும் அதில் ஏதோ ஒரு ஆத்ம திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டு அதனால் தொடர்ந்தும் பயனிக்க ஆர்வமுள்ளது. இது வரையில் எட்டு நடன ஆசிரியர்களை உருவாக்கியுள்ளேன் என்பதிலும் மகிழ்ச்சியே பல கனவுகள் இன்னும் உண்டு

**? நடனத்துறை சார்ந்து அண்மையில் மலேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தீர்கள். அதைப் பற்றி கூறுங்களேன்?**

மலேசியா செலாங்கூர் கிளானில் இயங்கும் சிதம்பரநாதர் ஓவியம் நடனப்பள்ளியின் அழைப்பில் அவர்களது மாணவர்களின் சலங்கை அணிவி


பி.மாணிக்கவாசகம்

ழாவிற்கு பிரதம விருந்தினராகவும் பயிற்சிப்பட்டறை நடாத்துவதற்கு வளவாளராகவும் சென்றிருந்தேன். எனது பயணத்துக்கான எல்லாவிதமான ஏற்பாடுகளையும் அவர்களே செய்திருந்தனர் மிகச் சிறந்த அனுபவங்களை பெற முடிந்தது

**? மலேசியாவில் நடனத்துறை எப்படி இருக்கின்றது? இந்தத்துறையில் அங்குள்ளவர்களின் ஆர்வம் எப்படி இருக்கின்றது?**

மிகவும் ஆர்வமானவர்களாகவும் கலாசார பண்பாடுகளை பின்பற்றக் கூடியவர்களாகவும் இருப்பது வியக்கதக்கதாகும் மலேசியாவில் நடனத்துறை மிகவும் சிறப்பாக அவர்களால் அறிந்தவரை சிறப்பாக அதனுடன் பயனிக்கின்றனர் என்றே கூறலாம் காரணம் அங்கு இரண்டு விதமான கலாசார பண்பாடுகளுடன் பின்னிப்பிணைந்து வாழ்கின்றனர் சீனார்கள் ,மலாய்க்காரர் இவர்களுடன் வாழ்ந்தாலும் தமிழர்கள் இந்துக்கள் என்ற அடையாளங்களை அவர்கள் பின்பற்றுவதிலிருந்து தவறவில்லை அங்கு நிறைய இந்து ,சைவ ஆலயங்கள் உண்டு அவைகளே சிறந்த அடையாளங்கள்

**? மலேசிய விஜயத்தின்போது அங்குள்ள கலைத்துறை ஈடுபாடு, ஆர்வம் என்பன குறித்து என்ன தெரிந்து கொண்டீர்கள்?**





**யாழ்ப்பாணத்தின் பலாலியை பூர்வீகமாக கொண்ட நாகராஜன் செந்தூரச்செல்வன் நடனத்துறையில் பட்டப்படிப்பை நிறைவு செய்து தற்போது வவுனியாவில் சிதம்பரேஸ்வரம் நடனாலயம் எனும் நடனப்பள்ளியை தமிழிலும், சிங்களத்திலும் நடத்திவரும் ஒரு கலைஞராவார். அண்மையில் அவரது மலேசிய கலைப்பயணம் பற்றி தமிழருவியுடன் மனந்திறக்கிறார்**

அங்கு இஸ்லாமிய மற்றும் சீனர்களின் வழிபாட்டுத்தலங்களை விட தமிழர்களின் மதவழிப்பாட்டு தலங்களையே அதிகம் பார்த்தேன். அங்கு தமிழிற்கும் தமிழ்கலாசாரத்திற்கும் அந்த நாட்டு அரசாங்கம் மிகவும் ஒத்துழைப்பு வழங்குகின்றது சட்டம் மிகவும் சரிசமனாக உள்ளது என்றே என்னால் கூறமுடியும் இவ்வாறு இருக்கின்ற தருணங்களில் ஆலயங்களில் வளர்ச்சி இருந்தாலே கலைகளின் வளர்ச்சி நிச்சயம் சிறப்பாக இருக்கும்

.அங்குள்ள குழந்தைகள் பண்ணிசை, கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் மற்றும் ஏனைய தமிழரின் பண்பாட்டுக் கலைகளை ஆர்வத்துடன் கற்பதை ஆச்சரியமாக பார்க்க முடிந்தது அந்த நாட்டு கலாசார சூழலிலும் இவர்கள் இவ்வாறு பின்பற்றுவது பாராட்டதக்கது. நான் மிகவும் வியந்த ஒரு விடயம் ஈழத்தில் ஒருகாலத்தில் சைவர்கள் என்று சிவனை மட்டும் வழிபடுபவர்கள் இருந்த மாதிரி அங்கும் இன்றும் அதனை மாற்றாது வாழ்பவர்கள் உண்டு. மற்றும் அவர்களது இல்லங்களில் உள்ள பூஜை அறையில் அவர்களது குலதெய்வம் யாரோ அந்த வழிபாட்டின் பின்புதான் ஏனைய கடவுளர் உண்டு. உதாரணம் ஈழத்தில் காளி, சிவன் [நடராஜர்], ஐயனார் இதுபேன்ற கடவுளரை வீடுகளில் பூஜை அறையில் வைப்பது மிக அரிது. ஆனால் மலேசியாவில் அது எந்த கடவுளானாலும் அவர்களது குல தெய்வம் தான் முதன்மை. மற்றும் கலை செயற்பாடுகளுக்காக பிள்ளைகளை முதன்மைப்படுத்துகின்றனர்

**? நடனத்துறையில் நீங்கள் எத்தகைய பயிற்சியை அங்கு அளித்தீர்கள்?**

மூன்று நாட்கள் சிறுவர்கள் முதல் ஆசிரியர்கள் வரைக்கும் எனது பயிற்சிப்பட்டறை நடந்தது. பெரும்பாலும் இந்தியாவிலிருந்தே வளவாளர்கள் அங்கு சென்றுள்ளனர் இலங்கையிலிருந்து நான்




யாழ்ப்பாணம் மகாவித்வான் வீரமணிஐயர் பாடல்களும் ஈழத்து சிவபதிகங்களும் என்ற தலைப்பில் எனது பயிற்சிப்பட்டறையை நடாத்தினேன் .

ஈழத்து ஈஸ்வரங்களிற்கான தேவாரப்பதிகங்களிற்கான நடன அமைப்பும் பண் முறையும் கற்றுக்கொடுத்தேன் அதிகமாக நடனங்களிற்கு நாங்கள் தென்னிந்திய தலங்களை தான் பாடியாடுவது வழமை. அதில் சிறிய மாற்றமாகவும் எமது நாட்டின் பெருமைகளையும் உலகறியட்டுமே என்ற எனது எண்ணப்பாட்டில் யாழ்ப்பாணத்து வீரமணி ஐயரின் பாடல்களுடன் இவற்றை கற்பித்தேன். வளர்ந்தவர்களுக்கு சாஸ்த்திரிய முறையிலும் சிறுவர்களுக்கு அபிநயப்படல் வடிவிலும் மற்றும் நடனத்தின் ஹஸ்தம், பாத நிலைகளில் காணப்படும் நுட்பமான வெளிப்பாடுகள் பற்றியும் கற்றுக் கொடுக்க முடிந்ததில் மகிழ்ச்சி.





**? நடனத்துறை தொடர்பில் மலேசியாவின் தேவைகளை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

நடனத்துறையில் அங்கு இலங்கை, இந்தியா போன்று ஒரு வரையறுக்கப்பட்ட பாடத்திட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை வருடா வருடம் நடாத்துதல் அவசியத் தேவை என எண்ணுகின்றேன் அங்கு பரதநாட்டியத்தை பொறுத்தவரை மார்க்கம் என்ற கட்டமைப்பு உண்டு. ஆனால் அவை பரீட்சை சார்ந்த செயல்முறை அறிமுறை தன்மையுடன் இருக்கும் போதுதான் அதனுடய அறிவினை முழுமையாக கற்க முடியும். அங்கு மாணவர்கள் தமிழ் எழுத்தை எழுதுவதே மிக அரிது. தமிழ் உச்சரிப்பை ஆங்கிலத்தில்தான் எழுதுகின்றனர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

**? எந்தெந்த வழிகளில் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

ஒரு சில மூத்த நடன ஆசிரியர்கள் இந்தியாவில் கற்று அங்கு கலை மன்றங்களை நடாத்துகின்றனர் இன்னும் சில இளம் கலைஞர்கள் இந்தியாவில் கற்றுள்ளனர் இவர்கள் எல்லாம் சேர்ந்து ஒற்றுமையாக ஒரு பரீட்சை நிறுவனத்தை ஆரம்பித்து அதனூடாக பரீட்சைகள் போட்டிகளை நடாத்தலாம் மற்றும் தமிழ்ப் பாடசாலைகளில் பாடத்திட்டத்தில் இணைக்கலாம்.

பொதுவாக கூறினால் மலாய்காரர்களுடனும் சீனர்களுடனும் மிகவும் சவாலாக தமிழ் கலாசார பண்பாட்டு கலைகளையும் விழுமியங்களையும் பாதுகாத்து பின்பற்றுகின்றனர் என்பது உண்மை.






அறிவியல் சாகரம்
ஆழ்ந்து முத்தெடு

# ஆக்கத்திறனை ஆதிக்கம் செய்யும் தொழில் நுட்பம்!

**விஞ்ஞான** உலகம் என்று கூறியவுடன் கேட்பவர் மனதில் வியப்பு வராவிட்டால் குற்றமாக நோக்கும் அளவிற்கு அதைப் பெரிதாகக் கருதுகிறோம். தொழிநுட்ப சாதனங்களின் உதவிகள் இல்லையேன் உலகமும் இல்லையென அதை நம்பி வாழ்கிறோம் . ஆதலால் முன்னோர்களின் அழகிய வரலாறுகள் தெரியாத இனமென்று காட்டுகின்ற வாய்ப்பேச்சுக்களும், செயற்பாடுகளும் எம்மில் நிறைந்து போயுள்ளன.

ஆம் நவீனத்தை நாமெல்லாம் இப்போதுதானே கண்டுகொண்டிருக்கின்றோம். பின்னொரு நாளில் நாம் நவீனம் என்றதையும் புராதனம் என்று பெயர் குறிக்கும் சமூகம் வரப்போவது ஒன்



றும் ஆச்சரியமில்லை . எப்படியாயினும் நாம் சில விடயங்களின் யதார்த்த உலகிற்குள் பிரவேசித்து சில கறைபடிந்த சிந்தனைகளை சீர்செய்து கொள்வதே எல்லோரினது முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இன்றைய நவீன சாதனங்களுடன் புழங்குகின்ற நாம் அவற்றின் தோற்றம் குறித்த உண்மைகளைத் தெரிந்தும் மறந்து போயிருக்கலாம். மனிதனின் ஆக்கத்திறன் கொண்ட செயற்பாடுகளை அதிகப்படுத்துவதற்காகவே சாதனங்களின் தோற்றம் உண்டாயிற்று. ஆனாலும் சாதனங்கள் இன்றி சாதனைகளே இல்லையென்ற தவறான ஒரு மகுட வாசகம் எல்லோர் மனதிலும் இடம்பிடித்திருப்பது கவலையான செய்தி.

வரலாறு தெரியாத, வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் படிக்காத , அது பற்றிச் சிந்திக்காத யாருடைய மனநிலையும் இவ்வாறுதான் இருக்கும் என்பதில் சந்தேகப் பட ஒன்றுமில்லை. இன்றைய சாதனங்கள் செய்யும் சாதனைகள் என்று கூறிக் கொள்ளும் எந்த விடயமானாலும் எம் முன்னோர்கள் ஏதோ ஒரு விதத்தில் அதுபோன்ற



அல்லது அதற்கு ஒத்ததொரு காரியத்தை செய்து சாதித்துக் காட்டியே உள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் எத்தனையாயிரம் ஆதாரங்கள் உலகில் பரந்து கிடக்கின்றன என்பதை யாவரும் அறிவோம்.

கடந்த காலங்களை நோக்குமிடத்து 2019 இல், அக்டோபர் 25 ஆம் தேதி, திருச்சி மாவட்டம் மணப்பாறைக்கு அருகில் பிரிட்டோ ஆரோக்கியராஜ் மற்றும் கலாராணி ஆகிய தம்பதிகளின் சுஜித் வில்சன் என்ற இரண்டு வயதுடைய ஆண் குழந்தை ஓர் ஆள் துளைக் கிணற்றில் விழுந்து உயிருக்காகப் போராடிய வேளை அவதியுற்ற அவ்வுயிரைக் காப்பாற்றாத சாதனங்களும்[ இந்தியா] , மார்ச் 2021-23 ஆம் திகதி புயலில் தடம்கவிழ்து கரைபுரண்டு

சூயஸ் கால்வாயை அடைத்து உலக வர்த்தகத்திலேயே தடை ஏற்படுத்திய எவர் கிவன் கப்பலை

விரைவில் மீட்டெடுக்காத இயந்திரங்களும் [எகிப்து], இலங்கை தலைநகர் கொழும்பு துறைமுகத்துக்கு சில மைல் தூரத்தில் [3.ஜூன்.2020]

நிறுத்தப்பட்டிருந்த சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட எக்ஸ்-பிரஸ் பேர்ல் என்ற தீப்பற்றி எரிந்த எண்ணெய் கப்பலை, கட்டுப்பாட்டில் கொண்டு வர பெரும் பிரயனத்தனம் எடுத்து தோற்றுப் போன தொழிநுட்பக் கருவிகளும் சாதாரண நேரத்தில் சுலபமான வேலைகளைச் செய்வதால் மட்டும் எப்படி அவற்றை சாதனைகள் என்று சொல்லிவிட முடியும்?.


ஆயிரமாயிரம் ஆண்டுகள் என்று பின்னோக்கி நகர்ந்துசென்று வரலாறு படித்தால் அன்றைய சாதாராணங்களுக்கும், இன்றைய சாதனைகளுக்கும் மத்தியில் உள்ள பெரும் வேறுபாட்டைக் காண இயலுமாக இருக்கும். அன்று சாதாரணமாகச் செய்த பல்லாயிரம் அம்சங்கள் இன்று அதிசயமாகத் தெரிவதுதானே உண்மையான சாதனையாக இருக்க வேண்டும்?. ஆம் நமக்குள்ளேயே இதை அன்று எவ்வாறு செய்தார்கள், எப்படி செய்திருக்க முடியும், இவ்வளவு நுட்பங்கள் இவற்றில் இருக்கின்றனவே! என்ற வியப்பு நிறைந்த வினாக்கொத்துக்கள் பிறப்பது கூட அந்தச் சாதனைகளின் தத்ரூபமான ஆற்றலைக் கண்டுதான். ஆனாலும் இன்றைய சாதனங்களைப் பார்த்துப் பழகி இவற்றின் துணையின்றி எப்படிச் செய்திருக்க முடியும்? என்ற கேள்வியுடன் மாத்திரம் பலரது வாழ்க்கை முடிவுக் கோட்டையும் தொட்டு விடுகிறது.

இதற்கான அடிப்படைக் காரணம்; துரதிர்ஷ்டவசமாக இன்று நாம் தொழில்நுட்பத் திறன், ஆக்கத்திறன் என்பவற்றுக்கிடையில் உள்ள வேறுபாட்டை அறியாமல் எமது சமூகத்தின் சிந்தனை ரீதியான பின்தங்கிய நிலைக்கு ஒரு வகையில் ஒத்துப் போகின்றோம் எனச் சொல்லிவிட முடியும்.

ஆக்கத்திறன் என்பது எளிமையில் வல்லமை காட்டுவதாகும். இதைத்தான் முன்னோர்கள் செய்து காட்டினார்கள். அவர்கள் அடிப்படை அம்சமான ஆக்கத்திறனை தன்னகத்தே கொண்டிருந்தார்கள். அதை வளர்ப்பதற்கான வளர்ச்சிப் பாதைகளையும் அதற்கென அமைத்தார்கள்.

அவர்களுடைய ஆக்கத்திறன் எதையும் எளிமையான விடயங்களாகவே அவர்கள் முன் நிறுத்தின. ஆதலால் அவர்களால் எந்தவொரு விடயத்திலும் வல்லமை காட்ட முடியுமான ஒன்றானது.

எடுத்துக்காட்டாக ஸ்பானியா நாட்டில் அன்றைய மனிதர்களின் ஆக்கத்திறனின் வல்லமையை சான்று பயில்கின்ற ஒரு நீர் தடாகத்தின் அற்புதமான நிர்மாணம் இன்று எவ்வளவு ஆச்சரியமாகப் பார்க்கப்படுகிறது என்று தெரியுமா? ஸ்பெயினின் டோலிடோவில் உள்ள டாகஸ்-நதியுடன் தொடர்புபடுத்தி நிர்மாணிக்கப்பட்ட அந்தத் தடாகத்தில் சந்திரனின் வளர்ச்சி, தேய்விற்கு ஏற்ப நீர் கூடிக் குறைந்து கொண்டிருந்



தது. பூரண சந்திரனின் போது முழுமையாக நிறையும் தடாகம் அமாவாசையின் போது ஒரு சொட்டுத் தண்ணீர் இன்றிக் காணப்படும் அளவிற்கு அவர்களுடைய ஆக்கத்திறன் அந்த நிர்மாணத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனால் ஆக்கத் திறன் கொண்ட அவர்கள் வெறுமனே சாதாரணத்தில் மட்டுமே வல்லமை காட்டினார்கள் என்றில்லை. அவர்களுக்கு அனைத்துமே சாதாரணமாகத்தான் தெரிந்தது என்றே கூற வேண்டும்.

தொழில்நுட்பத் திறன் என்பது சிக்கலானவற்றில் வல்லமை காட்டுவது எனலாம். அதாவது இன்றைய சூழலில் ஒரு வேலையை அதிக காலம் கொடுத்துச் செய்வதையே மனிதன் சிக்கல் என்பதாகக் கருதுகிறான். ஆகவே தன்னுடைய காரியங்களை விரைவாகவும் அதிகமாகவும் செய்வதற்காக வேண்டி தொழில்நுட்பத் திறனை அதிகமாகப் பயன்படுத்த முயல்கிறான்.

இந்த இரண்டு மிகப்பெரும் விடயங்களுக்குப் பின்னால் அனைவரும் அறிய வேண்டிய உண்மை ஒன்று இருக்கிறது. அதுதான்; உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஆக்கத்திறன் கொண்டவனாகவே பிறக்கின்றான்.இன்று பெரும்பாலான இடங்களில் தொழில் நுட்பத் திறனுக்கு பதிலாக மனித ஆக்கத்திறனை பயன்படுத்த சந்தர்ப்பம் கொடுத்தாலே முன்னைய சாதனைகள் கொண்ட நாகரீகம் ஒன்றைப் போல இப்போதும் ஒன்றை எளிதில் மீட்டுருவாக்கம் செய்துவிடலாம். ஆனாலும் தங்களிடம் மட்டுமே பணம் குவிய வேண்டும் என்ற குறுகிய சிந்தனையுடையவர்கள் மனித ஆக்கத்திறனைப் பயன்படுத்த முடியுமான இடங்களிலும் கூட தொழில்நுட்பத் திறன் கொண்ட சாதனங்களை நிறுவி வேலைவாய்ப்பற்ற ஏழை சமூகம் ஒன்றை உலகிற்கு தினம் தினம் உற்பத்தி செய்வதைப் பற்றி நாம் அனைவருமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஆக்கத்திறன் கொண்டவர்களே. எளிமையில் மட்டுமல்ல சிக்கலானவற்றிலும் வல்லமை காட்டும் தொழில் நுட்பத் திறன் கொண்ட சாதனங்களை உருவாக்கவும் உங்கள் ஆக்கத் திறனே அவசியமானவை.

நீங்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஆக்கத்திறனை வெவ்வேறு துறைகளில் புதுப்புது உற்பத்திகளாக வெளிக்கொண்டு வாருங்கள். உங்கள் உற்பத்திகளால் அதிகார வர்க்கத்தினரால் உற்பத்தி செய்யப்படும் ஏழ்மை சமூகத்தை நிச்சயம் காப்பாற்றி அடிமைக்கு விடுதலை அளிக்க முடியும். நீங்களுமாக இருந்தாலும் தொழில் நுட்பத் திறன் படைத்த சாதனங்களைக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவிய போதிலும் உலக ஆளும் வர்க்கத்தினர் போலல்லாமல் எல்லோருக்கும் சிக்கலாகத் தெரிகின்ற விடயங்களில் மாத்திரம் தொழில் நுட்பத் திறனைப் பயன்படுத்தி அதிலும் வல்லமை காட்டுவதுடன் அதிகமான மனித ஆக்கத்திறன்களுக்கு வாய்ப்பளிக்கும் படியான களம் அமைத்து அடிமைச் சமூகத்தினரிடமிருந்து அத்துமீறு பறித்தெடுக்கப்படும் வளச்சுரண்டல்களுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். ஆக்கத்திறனே அற்புதமான அடிப்படையான ஆரோக்கியமான திறன் என்பதையும் எளிமையானதிலும், சிக்கலானதிலும் வல்லமை காட்ட இது ஒன்றே அவசியமானதும் போதுமானதெனவும் புரிந்து கொண்டு இலக்குகளுக்கு அப்பாலும் முன்னோக்கி நகருங்கள்.



பி.ஆர். ரீசா
சிறப்புக் கற்கை
(அரபு மொழி)

ஆடுகளம்

# ஆடுகளங்களின் அதிர்வுகள்

ஏ.ஜே.ஞானேந்திரன்



## ரி20 உலகக் கிண்ணம் ஒரு கண்ணோட்டம்...

# வந்தார்கள் வென்றார்கள் சென்றார்கள்...

### வேகம் வேகம் வேகம்

விவேகத்தை தொலைத்து விட்டு, வேகத்தோடு தெருக்களில் வாகனங்களைச் செலுத்தி, தமது உயிருக்கு உலை உலைவைத்துக் கொண்டிருக்கும் காலம் இது.

இந்த யுகத்தில்தான் 5 நாள் டெஸ்ட் கிரிக்கெட் என்ற விளையாட்டும், ஐரோப்பிய குளிரில் சுருங்கி, ரி20, 50 ஓவர் ஒரு நாள் ஆட்டம் என்று புது வடிவங்கள் எடுத்துள்ளது.

வேகந்தான் இங்கே முக்கியம் என்றில்லை. விவேகமும் இருந்தால்தான், விக்கெட்டுக்களை அநியாயமாக இழக்காமல், புத்திசாலித்தனமாக அதாவது விவேகத்தோடு, விளையாடினால்தான், 20 ஓவர்களில் வெற்றி வாகை சூட முடியும்.

இந்த வருடத்திற்கான ரி20 கிரிக்கெட் சாம்பியனுக்கான சுற்றுப் போட்டி,13நவம்பர் அன்று நிறைவடைந்துள்ளது . கிரிக்கெட்டின் பிதாமகன் என்று சொல்லக்கூடிய இங்கிலாந்து, வெற்றி வாகை சூட்டியிரு'க்கின்றது. ஆரம்ப சுற்றுக்களிலேயே ரசிகர்களின் நம்பிக்கையைச் சிதறடித்து, சுற்றுப் போட்டியிலிருந்து தூக்கியெறியப்படும் நிலையிலிருந்த, இந்த அணி இன்று சாம்பியனாகி விட்டது அதிசயந்தான்..

தமிழ் சினிமாக்களில், கதாநாயகன் வில்லனிடம் நன்றாக வாங்கிக் கட்டி, குற்றுயிரும் குலையுயிருமாக விழுந்து கிடந்து விட்டு, திடீரென புதுப்பலம் பெற்று எதிராளிகளை துவம்சம் செய்து,களத்தில் நிற்கும் நிலைதான் இங்கேயும் இந்தக் கிரிக்கெட் அணிக்கு வந்திருக்கின்றது போலும்.

### பின்போடப்பட்ட மோதல்கள்

கொரோனா விரட்டிய சுற்றுப் போட்டிகளில் இந்த 2020ரி20 போட்டியும் உள்ளடங்குகின்றது. கொரோனா முழுமூச்சுடன் உலா வந்த காலத்தில் நெடைபெற வேண்டிய மோதல்கள்தான், 2 வருடங்கள் கழித்து, அவுஸ்திரேலிய மைதானங்களில் ரி20–2022 என்ற பெயரில் நடந்தேறி இருக்கின்றன.

இந்தச் சுற்றுப்போட்டிகள் அக்டோபர் 16இல் ஆரம்பித்து 13நவம்பரில் நிறைவடைந்துள்ளன.சபை குழப்பி என்பார்களே. அது வேறு யாருமல்ல... திருவாளர் வருண பகவான்தான். பல போட்டிகள் மழையினால் ரத்துச் செய்ப்பட்டன். இடையிலும் நிறுத்தப்பட்டன. [ஆனால் இந்த வருண பகவானின் ஆசி. இங்கிலாந்து அணியைக் கைதூக்கி விட்டதையும் மறுப்பதற்கில்லை]. மொத்தம் 16 அணிகள் பங்குபற்றின. 45 போட்டிகள் விளையாடப்பட்டன. அவுஸ்திரேலியா, ஆபுகானிஸ்தான், பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, நமீபியா, நியூசிலாந்து,பாகிஸ்தான்,ஸ்கொட்லாந்து, தென் ஆபிரிக்கா, இலங்கை, மே.இந்திய தீவுகள், அயர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நெதர்லாந்து, சிம்பாவே–இவைதான் அந்தப் பதினாறு நாடுகள்.

### சுப்பர் 12

ஆபுகானிஸ்தான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா , பாகிஸ்தான், நியூசிலாந்து, தென் ஆபிரிக்க அணிகள் நேரடியாக சுப்பர் 12 கட்டத்திற்கு நேரடியாகத் தெரிவாகின.. இந்த நாடுகளின் தரத்தைக் கணித்தே இத் தெரிவு இடம்பெற்றது. ஏனைய நான்கு அணிகளும் Global Qualifier என்ற சுற்றுப் போட்டிகள் மூலம்



தெரிவாகின. அயர்லாந்து, எமிரேட்ஸ், நெதர்லாந்து சிம்பாவே அணிகள்தான் சுப்பர் 12க்கு தெரிவாகிய மற்றைய நாடுகள்!

இது நொக்அவுட் முறையிலான சுற்றுப்போட்டி என்பதால், பலருக்கு சிம்ம சொர்ப்பனமாகத் திகழ்ந்த மேஇந்திய அணி, ஆரம்பத்தில் வெளியேற்றப்பட்டது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை மட்டுமல்ல பலத்த ஏமாற்றத்தையும் அளித்தது.

### ரி 20 பிறந்த கதை

இந்த வடிவத்திலான போட்டிகளை முதலில் பிராந்தியரீதியாகவே [English counties ] விளையாடிப் பார்த்துள்ளார்கள். அலுவலகரீதியாக முதன் முதலாக 2003 ஜூன் 13 அன்றுதான் விளையாடியுள்ளார்கள். Surrey Lions, Warwickshire Bears என்ற பெயர் கொண்ட இரு பிராந்திய அணிகள் இறுதியில் மோதி, Surrey Lions 9 விக்கெட்டுகளால் எதிரணியை வென்று சாம்பியனாகி இருக்கின்றது. Middlesex , Surrey என்று பிராந்திய அணிகள், 2004 ஜூலை15 அன்று லோட்ஸ் மைதானத்தில், ரி20 சாம்பியன் கிண்ணத்திற்காக மோதிக் கொண்டபோது. வந்த பார்வையாளார்கள் தொகை 27,509. எந்தவொரு பிராந்திய மோதலும் இதுவரை கண்டிராத பார்வையாளர்கள் தொகை இது.

### கன்னிமோதல்!

முதல் பரீட்சார்த்த கன்னி மோதலாக, ரி20 சுற்றுப் போட்டியொன்றை பாகிஸ்தான் தன் ம்ணணில் அரங்கேற்றியது..இதில் 13 நாடுகளின் கிரிக்கெட் வீரர்க்ள விளையாடிச் சிறப்பித்தார்கள். நடந்த காலம் 2004.

அவுஸ்திரேலியா, 2005 ஜனவரியில் தனது முதல் ரி20 மாதலை அரங்கேற்றியது. சுமாராக 25 ஆண்டுகளின் பின்னர் வராறு காணாத தொகை பார்வையாளர்கள் தொகை[20000] இங்கு வந்திருந்தார்கள்.இந்தியாவிலோ, 2008 இல் ஐபிஎல் என்ற சுற்றுப்போட்டி ஆரம்பிக்கப்பட்டு, இறுதி மோதல் கண்ட பாாவையாளர்கள் தொகை



100,000!!!!!!!!!!!! இப்படித்தான் இந்த ரி20 ஆட்டம் வலுப் பெற்று, ரசிகர்களின் அபிமான விளையாட்டாக மாறியது..

### ஏமாற்றிய இந்திய அணி

இந்திய அணிதான் கிண்ணத்தை தட்டிச் செல்லும் என்ற பலத்த , பரவலான எதிர்பாப்பு இருந்தது.. பந்து வீச்சு, துடு'ப்பாட்டம், களத்தில் பந்து பொறுக்குவது என்று அனைத்திலும் இந்திய வீரர்கள் சிறப்பான வீர்களோடு இந்தத் தடவை களத்தில் இறங்கிய அணியாக இந்தியா இருந்தமைதான் முக்கிய காரணம். ரன் மெஷின் ன்று வர்ணிக்கப்படும் கோலி, அடுத்தடுத்து தன் கைவரிசையைக் காட்ட, பந்து வீச்சாளர்கள் துடு'பபாட்ட வீரர்களை மிரட்டிக் கொண்டிருந்தார்கள்.. ஆனால் அரையிறுதி ஆட்டத்தில் சிங்கம் புலியைக் கண்டதும் வாலைச்சுருட்டிக் கொண்டு விடடது போலாகிற்று கதை. தனது ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களை மட்டுமே வைத்துக்கொண்டு, ஓட்டங்களை விளாசி, ஒரு பலவானைத் தலைகுப்பற வீழ்த்தியபோது, பலருக்கு அதிர்ச்சிதான்..

### உச்சிக்கு வந்தது எப்படி?

சுப்பர் 12இல் இங்கிலாந்து எப்படி விளையாடியது? 22ஒக்டோபரில் ஆபுகானிஸ்தானுடன் விளையாடியபோது, ஐந்து விக்கெட்டுகளால் வென்ற இங்கிலாந்து, 26ந் திகதி அயர்லாந்துடன் விளையாடிய சமயம், ஐந்து ஓட்டங்களால் டிஎல் முறையில் தோற்றபோது, இடையில் குறுக்கிட்ட மழையைத்தான் இவர்கள் திட்டியிருப்பார்கள். இவர்கள் மெல்பேர்னில் 28ஆம் திகதியன்று வுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடுவதை மழை தடுத்து நிறுத்தியது , புள்ளிகளை அழக்க வைக்காத அனுகூலமாக அமைந்தது. ஆனால் அவுஸ்திரேலியாவுக்கு இதனால் இழப்புத்தான்..பலப்பரீட்சைக்கு இடமி'ல்லாமல், அரையிறுதிக்கு தகுதி பெற முடியாது, நொக்அவுட்டாகியது கடந்த வருட சாம்பியன் அணி. இந்த மழையின் குறுக்கீட்டின் பின்னர், இங்கிலாந்துக்கு ஏறுமுகந்தான். நியூசிலாந்து, இலங்கை, இந்தியா என்று எல்லா அணிகளையும் வீழ்த்தி , இறுதி மோதலில் பாகிஸ்தானைச் சந்தித்திருக்கின்றது..

### வெற்றியும் சம்பாத்தியமும்

ஒரு நாள் ஆட்டத்திலும்[50 ஓவர் போட்டி] நடப்பு சாம்பியனாக இங்கிலாந்து இரு'ப்பது, ஒரு தனித்துவமான சாதனை.. இப்படி இதுவரையில் எந்த நாடும் சாதித்ததில்லை.

வெற்றியை எடுத்து வரும் மீட்பனாக, இங்கிலாந்தின் டெஸ்ட் அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ், இரண்டாவது தடவையாக போட்டியின் நாயகனாகி இருக்கிறார். இவரது துணிச்சலான ஆட்டம் இல்லையென்றால், கி'ண்ணம் கைமாறியிருப்பது திண்ணம்..

★ சாம்பியனான இங்கிலாந்து அணிக்கு கிடைத்த பணம் 1.6 மில்லியன் டாலர்.

★ இரண்டாவது இடத்தைப் பிடித்த பாகிஸ்தான் பெற்ற பணம் 0.8மி. டாலர்

★ அரையிறுதிக்கு வந்த நியூசிலாந்து, இந்தியாவுக்கு கிடைத்தது 0.4மி. டாலர்.

★ சுப்பர்12இற்க தெரிவாகிய அணிகள் பெற்ற பணம் அணிக்கு 0.2மி. டாலர்.





# பல தடைகள் தாண்டியே இவள் சாதனை

பெண்ணுக்கு அடுக்களையே
பெருமை என்றனர்
வண்ணக் கனவுகளை
வாழவிடாது புதைத்தனர்
எண்ணச் சிறகுகளுக்கு
எல்லைகள் வகுத்தனர்
கண்கள் மண்ணையே
காணப் பணித்தனர்

தலைநிமிர்ந்து வாழ்ந்தால்
தயங்காது பழிபோட்டனர்
கலைகளும் ஆகாது
கல்வியும் வேண்டாமென்று
மலையென அவளுள்
மருவிய திறமைகளை
சிலையெனவே கண்டனர்
சிற்றுயிர்ப்பும் ஊட்டாது

பெண்ணடிமை ஒழிக்கப்
பெருவழி வகுத்திடவே...
மண்ணில் உத்த
மகான்பாரதி பாக்களுமே....
வண்ணக் கனவுகளுக்கு
வியனுயிர் ஊட்டிடவே..
விண்ணிலும் சாதிக
வீறுகொண்டு எழுந்தாள்

மடைமை தகர்த்தாள்
மதிநுட்பங் கொண்டு
அடங்கிக் கிடக்க
அடிமையல்ல பெண்ணென்று
முடங்கிக் கிடவாது
முயன்றாள் முழுமூச்சுடன்
தடங்கல்கள் யாவையும்
தகர்த்துத் துளிர்த்தாள்

போராடி வாழ்வினில்
பெருவெற்றி கண்டாள்
பாராளும் அளவிற்குப்
பரந்தது அவளாதிக்கம்
நாடாளும் பொறுப்பிலும்
நாயகி இன்றுள்ளாள்
கோடானகோடி
நன்றிகளை
நவில்கின்றாள் கல்விக்கு



(குகதா)
டக்ஸனா
கிருஷ்ணானந்தன்




# ஒரு காதலியின் கதையால் என் காதல் பிறந்தது



செடியில் பூத்திருக்கும்
அந்த ரோஜாவை
விட, அவன் அதை பறித்து
காதலிக்கு கொடுக்கும் போது தான்
ரோஜா பூவின் அழகு இரு மடங்காகி
போகிறது....!
நிஜமான காதல் கதைகளை
கேட்கும் போதெல்லாம்
எனக்குள் ஒரு அமைதி....!
மென்மையான ஒரு புன்னகை....!
இன்னும் கொஞ்சம் அந்த காதல்
தொடர்ந்திருந்தால் என்ன என்ற
ஒரு ஏக்கம்....!

அந்த ஒருவனின் சந்திப்புக்கள்
அனைத்துமே யதார்த்தமாய் நிகழ்ந்த
வை, அவன் பெயரை தவிர
அவனை பற்றி பெரிதாய் எதுவுமே
அறிந்திருக்கவில்லை....
அவனின் அந்த நேர்மையான பேச்சுக்
களில் சிக்கி கொண்டேன்....
அவன் இதயத்தில் விழுந்த நான் இன்
னும் எழவில்லை....
அவனுடைய வேலை நேரங்களிலும்
எனக்கான சின்ன நிமிடங்களை
ஒதுக்கி கதை பேசுவான்....
ஓய்வு நேரத்தில் பொழுதுகள் என்னு
டன் தான் போகும்....

அவனின் முதல் காதலை சொல்லும்
போதெல்லாம் கட்டியணைத்துக்
கொள்ளவே நினைப்பேன்....
'அவளை உனக்கு நிறைய
பிடிக்குமோ?' என்றேன்....
'ம்ம் முதல் பிடிக்கும், இப்போது பிடிக்
கவில்லை' என்பான்....
'விட்டு போன உன் காதலி அழகி
யோ?' என்றேன்....
'உன்னை போலவே ரொம்ப அழகு'
என்றான்....
என் கண்களை பார்த்து இரு கைக
ளையும் இருக்கமாக பிடித்துக் கொள்
வான்....
அவன் பிடியில் இருக்கும் என் கை
களை விட்டு விடாதே என சொல்ல
தோன்றும்....
அவன் கைகளில் ஏதோ ஒரு ஆயுதத்
தால் வெட்டப்பட்ட நேரான தழும்பு
களை கண்டு உடனே என் கைகளை
எடுத்துக் கொண்டேன்....
நீ சைக்கோ காதலனா?
நான் அவளை உண்மையாக
காதலித்தேன்,
உண்மையாக நீ யாரையாவது நேசித்
ததுண்டா என கோபம் கொள்வான்....
அத் தருணங்களில் இவனுக்காகவே
வாழ நினைப்பேன்....

அவன் ஒருமுறை என்னிடம்
கேட்டான்
என் காதலியை பற்றி சொல்லும்
போது உன்க்கு என் மீது வெறுப்பு வர
விலலலையா என்று....
புன்னகைத்தேன்....
வாய்விட்டு சிரித்தேன்....
மௌனமாகவே கடந்தேன்....
நானும் ஒரு கேள்வியை எழுப்பினேன்
உன் காதலி மீண்டும் வந்தால் நீ
என்னை விட்டு அவளுடன்
போய்விடுவாயா?
அடி போடி பைத்தியக்காரி அவள் வரு
பவள் இல்லை ஆண்களை ஏமாற்றி
கொண்டு ஓடிக் கொண்டிருப்பவள்,
யாரையாவது இன்நேரம் கவிஞனாக்கி
விட்டிருப்பாள் என்றான்....

என்னை உனக்கு எவ்வளவு
பிடிக்கும்? என்றேன்,
கடலளவு பிடிக்கும் என்றான்....
ஏன் கடலை ஒப்பிடுகிறாய்?
என்றேன்,
கடல் அழம் தானே அதான்
சொன்னேன் என்றான்....
அங்கு தானே தற்கொலை அதிகம்?
என்றேன்,
ஆமாம் நீ ஒரு கடல், உன்னில்
விழுந்ததால் தானே என் நினைவு
களை கொலை செய்து கொண்டேன்
என்றான்....

இப்படியே ஒவ்வொரு சந்திப்பிலும்
அவனின் காதலியை பற்றியே தான்
கதைத்து கொண்டு பயணிப்போம்....
காதலியை கூட்டிச்சென்ற அழகான
இடங்களுக்கெல்லாம் என்னையும்
ஏற்றி செல்வான் அவனது பைக்கில்....
அதுவே காலப்போக்கில் காதலாக
மாறிப்போனது....
வெறுக்க தெரியாத அளவிற்கு
காதலிக்கிறேன்....
அவன் அழகானவன் என்று சொல்
வதை விட இயல்பிலேயே அழகாய்
இருக்கிறான் அதுவும் என்னை ஈர்ப்ப
தற்கான ஒரு காரணம் தான்....
அவனின் அந்த சிறியதொரு காத
லையும் முழுமனதோடு தந்து
போகிறான்....
எங்கிருந்தாலும் காற்றுப் போல பாது
காக்கிறான்....
சில நேர சண்டைகளில் நமது காதலை
ஆழமாக்கி கொள்கிறான்....
இப்படி ஒரு ஆண் தேவதைக்காகவே
வாழ்வதில் எந்தவொரு
பிழையும் இல்லை....



நுவரெலியா
செல்வி



# விரல்களில் எரிமலை ஒன்று வெடிக்கட்டும்

எழுச்சியைக் கொடுத்து
எண்ணங்களை உசுப்பிடும்
வழுக்கி வீழாது
வாழ்வையும் மாற்றிடும்

உண்மை நெறிகளை
உலகுக்கு உரைத்திடும்
கண்களில் சத்தியத்தை
கருத்தோடு நிறுத்திடும்

காயங்கள் கொடுக்காத
கரத்தின் ஆயுதம்
மாயமான விபரீதத்தையும்
மரித்திட வைத்திடும்

கவிக்கோவின் கவித்துவத்தில்
கனலாகச் சிந்தியது
கவிப்பேரரசு கண்ணதாசன்
கரங்களில் வைரமாகமின்னியது

கூரிய ஆயுதமாய்
குற்றத்தை கூறிடும்
புரியாத புதிர்களையும்
புவியில் உடைத்திடும்

அநீதியின் கொடுங்கோலை
அடக்கி அழித்திடும்
நீதியை நிதர்சமாய்
நிலைக்கச் செய்திடும்

எழுத்து வரிகளை
எண்ணங்கள் வடிக்கும்
விழுந்த மெய்மையும்
விவேகத்தில் துடிக்கும்

அறிவைப் புகட்டி
அதிகாரத்தை கொடுத்திடும்
அரியணையை ஏற்றி
அநியாயங்கள் அம்பலப்படுத்திடும்

விரல்களின் ஆயுதம்
காலத்தை வெல்லும்
மறத்தைக் கொடுத்து
மாண்பைச் சொல்லும்

விரல்களில் எரிமலை
ஒன்று வெடிக்கட்டும்
அறத்தை நிலையாக்கி
அன்பை விதைக்கட்டும்



கனல்கவி கிருஷ் அபி மன்னார்

# மாயை

பிறவி இங்கே எடுப்ப தெல்லாம்
பெரிய பாவம் !-உடலைப்
பிரிந்தே உயிரும் போவ தெல்லாம்
பெற்ற சாபம் - எந்த
இறைவி செய்த சூழ்ச்சி என்றே
தெரிய வில்லை !- பிறவி
எடுத்த நோக்கம் எவர்க்கும் இன்னும்
விளங்க வில்லை !

இன்ப மென்றே எண்ணும் முன்னே
இடர்கள் சூழும் - இடர்கள்
எதிர்க்கும் போதே இன்பம் வந்தே
எதிரில் ஆடும் - உயிர்மேல்
அன்பு கொண்டால் அதுவும் ஒருநாள்
அடங்கிப் போகும் - இந்த
அவனி தன்னில் காணும் யாவும்
மாயை யாகும் !



பாவலர் கோவதன்
பட்டர்வொர்த்






**மேஷம்**

சற்று மத்திமமான பலன் தரும் வாரமாகும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை நிதானம் தேவை. தொழில்சார்ந்த வேலைப்பளு அதிகமாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் இழுபறி நிலை காணப்படும். பணவரவு சற்று அதிகமாக இருக்கும். தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டாம்.பெண்களுக்கு சஞ்சல நிலை. மாணவர்களுக்கு கவனம் தேவை.
அனுகூலமான நாள் - திங்கள், அனுகூலமான திகதி -27

**ரிஷபம்**

ஓரளவு அனுகூலமான பலன் தரும் வாரமாகும். பணவரவு தேவைகளை பூர்த்தி செய்யும். குடும்பத்தில் அனுகூலமான நிலை காணப்படும். சுபகாரிய பேச்சு வார்த்தைக்கும் இடமுண்டு. எந்த விடயம் எடுத்தாலும் நன்மை கிடைக்கும்.
அனுகூலமான நாள் - வெள்ளி அனுகூலமான திகதி- 24

**மிதுனம்**

சற்று சிரமங்கள் நிறைந்த வாரமாகும். காரியத்தடை அதிகமாக இருக்கும்.எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை, நிதானம் அவசியம். கடன் பிரச்சனைகள் சற்று அதிகமாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை. குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும். உடல் சார்ந்த உபாதைகள் இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை.
அனுகூலமான நாள் - புதன், அனுகூலமான திகதி- 28

**கடகம்**

மிகவும் சிறப்பான வாரமாகும். தொழில்சார் முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும். பணவரவு திருப்திகரமானதாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நன்மைகள் கிடைக்கும். எதிர்பார்த்த விடயங்களில் ஓரளவு வெற்றிகள் கிடைக்கும். பெண்களுக்கு சிறப்புண்டு.
அனுகூலமான நாள் - திங்கள்
அனுகூலமான திகதி - 25

**மீனம்**

மிகவும் சிறப்பான பலன் தரும் வாரமாகும். தொழில்சார் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். பணவரவு திருப்திகரமானதாக இருக்கும். குடும்பத்தில் நன்மைகள் ஏற்படும். சுபகாரியங்கள் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் கிடைக்கும். பெண்களுக்கு நன்மையுண்டு.
அனுகூலமான நாள்- வியாழன், அனுகூலமான திகதி- 30

**சிம்மம்**

சற்று அலைச்சல் நிலை காணப்படும். காரியத்தடை இருக்கும். தொழில்சார்ந்த வேலைப்பளு அதிகமாக காணப்படும். தாயார் வழியில் எதிர்பாராத செலவீனங்கள் காணப்படும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமையுடனும் நிதானத்துடனும் செயற்பட வேண்டும். பணவரவு ஓரளவு தேவைகளை பூர்த்தி செய்யும். உடல்சார்ந்த உபாதைகள் இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை.
அனுகூலமான நாள்- ஞாயிறு, அனுகூலமான திகதி- 27

**கன்னி**

கன்னி- சற்று சிரமங்கள் நிறைந்த வாரமாகும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை, நிதானத்துடன் செயற்படவேண்டும். பணவரவு தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும்.
அனுகூலமான நாள்- புதன், அனுகூலமான திகதி 28

**துலாம்**

துலாம்- சிறப்பான,அனுகூலமான வாரமாகும். தொழில்சார் முன்னேற்றம் சிறப்பானதாக காணப்படும். பணவரவு திருப்திகரமானதாக இருக்கும். எதிர்பாராத பணவரவுகள் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் சுமுகமான நிலை காணப்படும். குடும்பசார் அனுகூலங்கள் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.
அனுகூலமான நாள்- வெள்ளி, அனுகூலமான திகதி- 28

**விருச்சிகம்**

விருச்சிகம் - சிறு சிறு சஞ்சலங்கள், பிரச்சனைகள் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை,நிதானம் அவசியம். தொழில்சார் வேலைப்பழு அதிகமாக இருக்கும். உடல்நிலை சார் உபாதைகள் இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை. மாணவர்ககளுக்கு முயற்சி தேவை.
அனுகூலமான நாள்-திங்கள், அனுகூலமான திகதி- 27

**தனுசு**

னுசு- சற்று செலவீனங்கள் அதிகமான வாரமாகும். பணவரவு ஓரளவு தேவைகளை பூர்த்தி செய்யும். குடும்பத்தில் சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை,நிதானம் தேவை. தொழில்சார் வேலைப்பழு அதிகமாக இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும்.
அனுகூலமான நாள் - வியாழன், அனுகூலமான திகதி- 30

**மகரம்**

மகரம் - சிறப்பான, அனுகூலமான வாரமாகும். முன்னேற்றங்கள் சிறப்பானதாக இருக்கும். பணவரவு திருப்திகரமானதாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் முன்னேற்றம் இருக்கும். உறவினர்கள் மூலம் நன்மைகள் கிடைக்கும். பெண்களுக்கு நன்மையுண்டு.
அனுகூலமான நாள்- ஞாயிறு, அனுகூலமான திகதி- 28

**கும்பம்**

கும்பம்- தொழில்சார் வேலைப்பழு அதிகமாக இருக்கும். திடீர் பிரயாணங்கள் ஏற்படும். பணவரவு திருப்திகரமானதாக இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் அலைச்சல் நிலை காணப்படும். குடும்பத்தில் சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு சிறப்புண்டு.
அனுகூலமான நாள்- ஞாயிறு, அனுகூலமான திகதி-26

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இலவுகாத்த கிளியாகும்....

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேசுவதற்கு எதுவுமே இல்லை என்பதுதான் அவரது நிலைப்பாடு. தமிழ் கட்சிகளைப் பொருத்தவரையில் சமஸ்டி என்ற கோரிக்கையை முன் வைப்பதற்கு அவர்கள் தீர்மானித்திருப்பதாக தெரிகின்றது.

சமஷ்டி என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்கம ஏற்கனவே வெளிப்படுத்தி இருப்பதால் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதில் என்ன அர்த்தம் இருக்கப் போகிறது என்பதுதான் கஜேந்திரகுமாரின் கேள்வி. இந்த நிலைமையில் தமிழ் கட்சிகளின் கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ அல்லது அவரது கட்சியினரோ கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தெரிகின்றது.




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவை பொருத்தவரையில் பாரிய பொருளாதாரம் நெருக்கடியிலிருந்து நாட்டை காப்பதற்கான பொறுப்பை அவர் ஏற்றிருக்கிறார்.

இந்தப் பொறுப்பை ஓரளவுக்காவது நிறைவேற்றினால் தான் அடுத்த வருடத்தில் அவர் திட்டமிட்டு இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதியாக முடியும். இதற்காக வெளிநாட்டு உதவிகளை அவர் பெறமுள்ளவுக்கு நம்பி இருக்கின்றார் என்பது வெளிப்படையாக தெரிகின்றது. சர்வதேச நாணய நிதியமும் முன் வைத்திருக்கின்ற நிபந்தனைகளால் எதிர்பார்த்த விரைவில் கடன் உதவிகளை அவரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

### கண்துடைப்பு நாடகம்

மேற்கு நாடுகளும் இந்தியாவும் ரணில் விக்கிரமசிந்தவை பாதுகாக்க வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயல்படுவதாகவும் இல்லை. இலங்கையில் காணப்படும் உள் கட்டமைப்பு நடைமுறைகள், மற்றும் அதிகாரிகள் மட்டத்தில் காணப்படும் ஊழல்கள் மற்றும் அரசியலில் உருவாகி இருக்கும் நிச்சயமற்ற நிலை என்பன வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தடையாக இருக்கின்றது. தங்களுக்கு இலகுவானதும் அதிக அளவு லாபத்தை பெறக்கூடியதுமான நாடுகளை அவர்கள் நாடி செல்கின்றார்கள்.



இந்த நிலைமை காரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு இன்றுள்ள ஒரே ஒரு மார்க்கம் புலம்பெயர்ந்த தமிழ் தொழில் அதிபர்களை அழைத்து அவர்களுடைய முதலீடுகளை பெற்றுக் கொள்ளுதலாகும். அதற்கான முயற்சிகள் இப்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட வருகின்றன. தமிழ் முதலீட்டாளர்களே அழைக்க வேண்டுமாக இருந்தால் சில விடயங்களை செய்ய வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

அதன் ஒரு கட்டமாக தான் அரசியல் கைதிகள் விடுதலை அரங்கேறியிருக்கின்றது. அரசியல் தொடர்பாக பேசுவதற்கும் தான் தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப்பதும் இந்த பின்னணியில் தான். ஆனால் தமிழ் கட்சிகளிடையே காணப்படும் பிளவு ரணில் விக்ரமசிங்காவுக்கு சாதகமாகவே இருக்கின்றது.

காலத்தை கடத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இதனை அவர் பயன்படுத்திக் கொள்ளலாம். அதே வேளையில் கணிசமான அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளேன் எனக் காட்டிக் கொள்வதும் அரசியல் தீர்வு ஒன்றுக்கு தான் தயாராக இருப்பதாக சொல்லிக் கொள்வதும் தனக்கு சாதகமாக அமையும் என்று ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார்.

ரணில் விக்கிரமசிங்காவை பொறுத்தவரையில் அவர் ஒரு அரசியல்வாதி. சந்தர்ப்பங்களை சாதகமாக பயன்படுத்திக் கொள்வது தான் அரசியல். ஒரு முறை அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு தேவையான காய் நகர்த்தல்களை அவர் முன்னெடுத்து வருகின்றார். தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வந்தாலும் கூட ஒரு வருடத்திற்குள் தீர்வை காணக் கூடியதாக இருக்கப் போவதில்லை. மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதியாக தான் வந்த பின்னர் அதனை செய்வதாக அவர் சொல்லலாம்.

இருந்த போதிலும் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்த சந்தர்ப்பத்தை தமிழ் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஏனெனில் தற்போதைய பொருளாதார நெருக்கடியும் சர்வதேச அரங்கில் உருவாகி இருக்கும் நிலைமையிலும் தமிழ் தரப்புக்கு பேரம் பேசும் பலம் ஒன்றை கொடுத்திருக்கின்றது. தமிழ் தரப்புக்கள் இதனை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றன?









# தொலைக்காட்சியும் நாமும்

நல்ல நல்ல தொலைக்காட்சி
நலம் தரும் தொலைக்காட்சி
வண்ண வண்ண தொலைக்காட்சி
வளம் தரும் தொலைக்காட்சி

இனிமை தரும் தொலைக்காட்சி
இசையும் தரும் தொலைக்காட்சி
கதைகள் தரும் தொலைக்காட்சி
கவலை மறைக்கும் தொலைக்காட்சி



ர.பவுஷிகா
தையிட்டி

# பூரணி பாட்டி வந்திருக்கா...

## தேடல் பசிக்கு விருந்து



அட பசங்களா,

உந்த ரீவி ரிமோட்ட கொஞ்சம் தாங்கோடா. நாள் முழுக்க உந்த சுட்டி ரீவிய பாத்திட்டு இருந்தா நாட்டில நடக்கிற புதினங்கள நான் எப்பிடி தெரிஞ்சுக்கிறது... செய்தியளை எண்டாலும் பாக்கவிடுறிங்களா நீங்கள்..என்ன பிள்ளையளோ தெரியல.இஞ்ச கொண்டாங்கோ உந்த ரிமோட்ட...கொஞ்சத்துக் காச்சும் உத நிப்பாட்டினா தான் சரி. எப்ப பாத்தாலும் ரீவிக்கு முன்னால தான். எங்க போறிங்கள்? இதில இருங்கோவன் பாட்டியோட.. எப்ப பாத்தாலும் ரீவியோட இருக்கிறியள் ஆனால் இதின்ர வரலாறு கேட்டா தெரியாது. நான் சொல்லுறன் கேளுங்க.

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஜான்லூகிபர்டு எண்டவர் தான் 1926ம் ஆண்டு தொலைக்காட்சியை கண்டுபிடிச்சவர்.அப்ப இதை 'டலிவிசர்' என்று தான் சொல்லுவாங்க...இதால எங்களுக்கு பல நல்ல விசயங்கள் கிடைக்குது. உலகத்தில நடக்கிற சகல விசயங்களையும் அறியலாம், உங்கள போல சின்னஞ்சிறுசுகளுக்கெண்டு இப்ப கல்வி ரீவி, சுட்டி ரீவி எண்டு எத்தனை புதிய சனல்கள் வந்திருக்கு..அதுகளில நீங்க பல விசயங்களை கத்துக்கலாம்.

ஆனாலும் எந்த விசயத்திலயும் நன்மைய போல தீமையும் இருக்கும் தானே.இந்த ரீவியாலயும் பல தீமைகள் இருக்கு. உங்கள போல இப்பிடி ரீவிக்கு முன்னுக்கு இருந்து பாத்தா கண் பார்வை மங்கிப் போடும். எப்பவும் பத்தடி தூரத்துக்கு அங்கால தான் இருக்கணும் சரியோ.

அத போல தொடந்து ரீவி பாக்கவும் கூடாது. கொஞ்ச நேரம் பாத்திட்டு பிறகு நீங்க உங்க பிறண்ட்ஸ் ஓட விளையாடலாம்,படிக்கலாம், பாட்டிட்ட வந்து கதை கேக்கலாம்... விளங்குதா பிள்ளையளே, 'அளவிற்கு மிஞ்சினா அமுதமும் நஞ்சு' ஒண்டுக்க போனா அதுக்கயே மூழ்கிப்போய் இருக்கக்கூடாது.

நானும் ஒவ்வொருக்காவும் ஒவ்வொண்ட சொல்றது நீங்க அதை இந்த காதால கேட்டு அந்த காதால விடுறது..சரி அம்மா சமைச்சிட்டா போல போய் சாப்பிட்டிட்டு வாங்க..பாட்டி அதுமட்டும் செய்தி பாக்கப்போறன்.

# தொலைக்காட்சி



தொலைவிலுள்ள செய்தியை காட்சி மூலம் தருகிறாய் .
ஒளியாலும், ஒலியாலும் என்னை திகைக்க வைத்து உன்னருகில் இருத்தி விடுகிறாய்.
அறியாததை அறிய வைக்கிறாய்.
அதிகம் பார்த்தால் அமுதமும் நஞ்சென்பதை உணர்த்தி விடுகிறாய்.
பாமரனுக்கும் பலவற்றையும் அறிய வைக் கிறாய்.
தனிமையையும் இனிமையாக்கினாய்.
உலகையே என் கண்முன் கொண்டுவரும் உன் செயலை எண்ணி வியக்கிறேன்.
நீ இல்லாவிடில் மாறிவிடும் சமுதாயம் கிணற்றுத்தவளையாக.......

**ச.ஜான்ஸி, மட்டக்களப்பு**

# தொலைக்காட்சியும் நாமும்



விஞ்ஞானம் மெய்ஞானம் ஊட்டி
கட்டிக்கரும்பாக
வருது தொலைக்காட்சி
இனி கனவெல்லாம் நிறைவேறும்
வேறென்ன வேண்டும் சாட்சி.
இது நம்ம தொலைக்காட்சி
அது தான் நம்ம தொலைக்காட்சி
அகிலமெங்கும் பரவட்டும்
அதன் ஒப்புயர்வற்ற மாட்சி.

செழிக்கும் நற்கவியால்
தழைக்கும் நம் தேசம்
கல்வியுகப் புரட்சியாய்
வருகுது தொலைக்காட்சி.
வளர்ச்சி ஒன்றை மூச்சாக்கி
பாடங்கள் மாறுது.
கல்வி ஒன்றை கையிலெடுத்து
அறிவிங்கே படங்களாக ஓடுது.
வெற்றி பெறும் வழி பலவும் காட்டி

**சூ.அனித் (தையிட்டி)**

★ தொலைக்காட்சி நமது பொழுது போக்கு சாதனமாகும்.
★ நமது வாழ்க்கைக்கு தேவையான பல தகவல்களை தருகிறது.
★ தொலைக்காட்சியை ஜோன் லோகி பெயார்டு கண்டுபிடித்துள்ளார்.
★ நம் தனிமையை போக்கும் மிகச் சிறந்த சாதனமாகவும் உள்ளது.
★ தொலைக்காட்சி ஒலி மற்றும் காட்சியின் மூலம் நமக்கு தகவல்களை தருகிறது.

**ர. ஒபிசன்**
**தையிட்டி கிழக்கு.**





# அன்புள்ள நாற்றுகளுக்கு...

மாதத்தின் இறுதி வாரத்தில் இடம்பெறும் நாற்றுக்களின் விவேகத்தை அளவிடும் போட்டியில் நீங்களும் கலந்து கொண்டு நீங்களும் வெற்றியாளராக வேண்டுமாயின்:-

- **வாரந்தோறும் 'தேடல் பசிக்கு விருந்து' எனும் பகுதியை அவதானமாக வாசியுங்கள்.**
- **ஒவ்வொரு வாரமும் தவறாது நாற்றுக்களுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்.**

ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்திலும் 'தேடல் பசிக்கு விருந்து' எனும் பகுதியில் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான பதிலை அனுப்பி வெற்றியாளராகி, தமிழருவியினால் வழங்கப்படும் அன்புப்பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

**குறிப்பு:-** வாரந்தோறும் திறமைகளை வெளிப்படுத்த ஆக்கங்கள் அனுப்பும் சிறுவர்கள் மாத்திரமே போட்டியில் இணைத்துக்கொள்ளப்படுவர்.
உங்கள் ஆக்கங்கள் வந்துசேரும் இறுதிநாள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையாகும்.

**அடுத்தவார தலைப்பு -**
**சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்**

**அனுப்பவேண்டிய மின்னஞ்சல்- aruvitamil812@gmail.com**
**வாட்சப் இலக்கம்- 0094 768320733**

# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....







